சிலம்பு-௧௭] பிரமாதி—ஐப்பசி [பரல்-௭

முதியவர் கல்வி*

[துடிசைகிழார் அ. சிதம்பரனார்]

முதியவர்களுக்குக் கல்வி அவசியம் என்பது

உலகின்கண் பிறந்த மக்கள் அனைவருக்கும் கல்வி அவசியமே. அதிலும் படிப்பில்லாத முதியவர்களுக்கு மிக மிக அவசியம்.

மனிதன் உடம்பில் மிகச் சிறந்த அவயவம் கண் ஆகும். ஆதலின் "**கண்ணிற் சிறந்த உறுப்பில்லை காணுங்கால்**" என்ற வாக்கியமும் எழுந்தது. அத்தகைய கண்ணை உடையவர்களாயிருந்தும் கல்வி இல்லாதவர்களைக் குருடர்கள் என்று 2,000 ஆண்டுகட்கு முன்னிருந்த நம் தெய்வப்புலமைத் **திருவள்ளுவர்** கூறுகின்றார். குருடர்கள் என்று மாத்திரம் அவர் கூறவில்லை; அக் கண்கள் **புண்கள்** என்கிறார்:

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்". (குறள்)

வெறும் குருட்டுக் கண்களாயிருந்தால் கண் மாத்திரம் தெரியாதே யொழிய அவைகளால் யாதொரு துன்பமும் கிடையாது. அக் கண்கள் புண்களாயிருந்தாலோ கண் தெரியாததோடு எக்காலத்திலும் எவ்விடத்திலும் துன்பத்தைக் கொடுக்

---

* இது 17—9—39-ல் சென்னையில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கும் 'தானே தமிழ் கற்கும் முறை' என்னும் புத்தகத்தைப்பற்றிச் சென்னை மேயர் திருவாளர் K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் தலைமையில் பேசப்பட்டது.

துக்கொண்டேயிருக்கும். ஆகையால் எவனாவது தன்னுடைய இருகண்களும் புண்களாயிருக்க விரும்புவானோ? மாட்டவே மாட்டான். ஆதலின் எல்லோரும் கல்வியை விரும்புவார்கள் என்பது ஒருதலை.

மனிதனுக்கு இருகண்கள் உண்டு. அதுபோல் கல்வியிலும் "எண்ணும் எழுத்தும்" இரு கண்களுக்கு ஒப்பானவை. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" (ஔவையார்) கண்ணில்லாதவர் ஒளியைப் பார்க்க முடியாததுபோல, கல்வி இல்லாதவர் உலக அறிவு, அரசியல் அறிவு, கடவுள் அறிவு முதலிய அறிவு ஒளிகளைப் பார்க்க முடியாது. அவர்கள் தான் விழித்த கண் குருடர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தாங்கள் குருடர்களாய் (அறியாதவர்களாய்) இருப்பதோடு தங்களுடைய குருட்டுத் தன்மையினால் (அறியாமையினால்) பல காரியங்களைச் செய்து தங்களுக்கும் தம் சுற்றத்தவர்களுக்கும் தம் நாட்டவர்களுக்கும் ஓயாத துன்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய மக்களைத்தான் நம் வள்ளுவர் "முகத்திரண்டு புண்ணுடையர்" என்று கூறியுள்ளார். ஆதலின், படித்தவர்கள் படியாதவர்களையும் படித்தவர்களாகச் செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் படித்தவர்கள் துன்பம் உறநேரிடும் என்றும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே குறித்துள்ளார்.

நம் நாட்டில் படிப்பில்லாத தன்மையை நாட்டைவிட்டு ஓட்டுவதற்குப் படித்தவர்கள் முன்வர வேண்டும். அரசாங்கமும் அதற்கு உதவிசெய்யவேண்டும். அரசாங்கமே அந்த வேலையைச் செய்யட்டுமென்று படித்தவர்களும் இருக்கக் கூடாது; படித்தவர்களே செய்யட்டுமென்று அரசாங்கமும் இருக்கக்கூடாது. இருதிறத்தாரும் ஒருமித்து உழைத்தால் படிப்பின்மையைப் போக்க முடியும்.

II இந்தியாவின் தற்காலக் கல்வி நிலை

கல்வியைப் பொறுத்த மட்டில் இந்தியா என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுவதோடு ஏனைய தேசங்களின் கல்வி நிலையையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

1931-ம் வருடத்திய (census) மக்கட்டொகைக் கணக்கின் படி இந்தியாவில் **100 க்கு 90** பேரும்; இங்கிலாந்தில் 100-க்கு **6 பேரும்**; அமெரிக்காவில் 100-க்கு **5·6** பேரும், இரஷ்யாவில்

100-க்கு **2** பேரும்; ஜர்மனியில் 100-க்கு ஒருவனும்; ஜப்பானில் 100-க்கு 3 பேரும் படியாதவர்கள் என்று ஏற்படுகிறது.

1881-ம் வருடத்திய கணக்கின்படி இந்தியாவில் 100-க்கு **96·5** பேர் படியாதவர்கள்.

1881 முதல் 1931 வரை 50 வருடங்களாக எடுத்துக் கொண்ட முயற்சியினால் 100-க்கு 6½யே குறைந்திருக்கிறது. இந்த வீதத்தில் நாம் போய்க்கொண்டிருந்தால் இந்தியா மற்றைய நாடுகளைப்போல் ஆவதற்குக் குறைந்தது ஆயிரம் வருடங்கள் செல்லும். நம் நாடு சுதந்தரம் பெறவும், தொழின் முறையில் முன்னேறவும் வேண்டுமானால், 100-க்கு 100 படித்தவர்களாகக் கல்வி நிலையை உயர்த்த வேண்டும்.

III ஆங்கில ஆட்சிக்குமுன் கல்வி நிலை

ஆங்கில ஆட்சி வருவதற்கு முன்னம் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு **திண்ணைப் பள்ளிக்கூடம்** உண்டு. அம்மாதிரியான (Pial schools) பள்ளிகள் இந்தியாவில் மொத்தம் **2,60,946** இருந்தன என்றும், அவைகளில் **6,10,47,289** ஆண்களும் **14,67,857** பெண்களும் படித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் அரசாங்கக் கணக்கே கூறுகின்றது. அஃதாவது 1,500 பேர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் இருந்ததாக ஏற்படுகிறது

இப்போது உள்ள பள்ளிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்று தெரியும். பள்ளிக்கூடங்கள் வரவரக் குறைந்துபோகக் காரணம் என்னவென்றால் (Result grant system) பிள்ளைகள் தேர்வுகளில் தேறுகிற வீதப்படி கொடுக்கும் அரசாங்கத் தொகையை நிறுத்திவிட்டது ஒன்று. ஆசிரியர்களுக்குப் பயிற்று முறைத் தேர்வு (Training) அவசியம் என்று ஏற்பாடு செய்தது இரண்டு.

ஆகையால், கல்வியில்லாத் தன்மையைப் போக்கவேண்டுமானால், ஊருக்கு ஒரு பள்ளிக்கூடமும், பையன்கள் தேறுகிற வீதம் தொகையும் (grant) ஏற்பாடு செய்தல் வேண்டும்.

IV. இந்தியாவில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் பணம்

இந்தியாவில் தற்காலம் கல்வி வளர்ச்சிக்காகச் செலவு செய்யப்படும் பணம் மிக மிகக்குறைவு. மொத்த வருமானத்தில் 100-க்கு 6 விழுக்காடு ஆகிறது. ஏனைய நாடுகளில் கல்விக்காக ஏராளமாகச் செலவு செய்கிறார்கள். கல்வி வளர்ச்சி கருதி

அரசாங்கத்தார் அதிகம் செலவு செய்ய முன் வராததைக் கண்டு சென்ற 19-வது நூற்றாண்டில் G. K. கோகலே போன்ற பெரியார்கள் மக்களின் உதவி கொண்டு பல கல்லூரிகளையும் சர்வகலாசாலைகளையும் நிறுவினார்கள். அவைகளில் காசி இந்து சர்வகலாசாலையும், அலிகர் சர்வகலாசாலையும், லாகூர் D. A. V. கல்லூரியும் முக்கியமானவை. அவைகள் எல்லாம் ஏற்பட்டும் இன்னும் 100-க்கு 90 பேர் படியாதவர்கள் என்றால் இன்னும் எத்தனை சர்வகலாசாலைகளும் பள்ளிகளும் நிறுவப் பட வேண்டுமென்று பாருங்கள்!

V. இந்தியாவும் குடியரசும்

இந்தியாவானது குடியரசு முறையை நாடி நிற்கிறது. அதற்குத தக்கபடி மக்களை நாம் படித்தவர்களாகச் செய்யா விட்டால் இந்த நாட்டிற்குத் தீங்கு விளையும் என்பது சொல்லாமலே அமையும்.

வீதியில் நடப்பவனும், கழனியில் காளைமேய்ப்பவனும், மலையில் தேன் அழிப்பவனும், கடலில் மீன் பிடிப்பவனும், சட்டசபை அங்கத்தினனாய் இருப்பவனும், பள்ளி ஆசிரியனும் நீதிமன்றத்தில் நியாயத்தை எடுத்துச் சொல்லும் வழக்கறிஞனும்அனைவரும் ஒரே மாதிரியாக உலக அறிவு, அரசியல் அறிவு, சுகாதார அறிவு, சமுதாய அறிவு பெற்றவர்களாயிருந் தால் மாத்திரம் குடியரசுக் கொள்கை நன்மை தருமே யொழிய வேறின்று.

"Above all, the purity of democratic Government can only be maintained by a constant contact with check by the enlightened masses who can follow, guide, criticise and initiate"

என்று அரசியல் அறிவு வாய்ந்த பம்பாய் முதன்மந்திரி யார் கூறுகிறார். சட்டசபையில் நடைபெறும் விவரங்களைத் தெரிந்துகொள்ளவும், திருத்தங்கள் செய்யவும், தகுதியற்ற வர்களைக் குறித்துக் கண்டித்துப் பேசவும் ஜனங்கள் வல்ல வர்களாயிருக்கவேண்டு மென்றால் மக்கள் 100-க்கு 100 பேர் படித்தவர்களாயிருக்கவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் தங்கள் வாக்குரிமையின் (vote) மகிமையை அறிவார்கள்.

ஜனங்களாகப் பார்த்துத் தங்கள் தொகுதியில் இன்னா ரைச் சட்டசபைக்கு நிறுத்த வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு அன்னாரை நிற்க வேண்டுமென்று மன்றாட வேண்

டுமேயொழிய, இன்றைக்கு நடப்பதுபோல, சட்டசபை அங்கத்தினராயிருக்க வேண்டுபவன் ஜனங்களிடம் போய் "எனக்கு உங்கள் வாக்குரிமையைக் கொடுங்கள்; நான் இந்திரனுக்கும், சந்திரனுக்கும்; நான் வேண்டிய எல்லாவற்றையும் செய்கிறேன்" என்று கெஞ்சியும், பணத்தினால் மயக்கியும் வேறு விதங்களால் மக்களை ஏமாற்றியும் சட்டசபைக்குப் போய் வாளாவிருத்தல் நன்மை தருவதாகாது.

எல்லாத் துறைகளிலும் ஜனங்கள் அறிவுடையவர்களாக ஆவதற்குப் படிப்பே முக்கிய காரணம் என்று எல்லோரும் அறிய வேண்டும்.

VI. படிப்பின்மையைப்போக்க ஒவ்வொரு மாகாணத்திலும் என்ன செய்கிறார்கள்?

குடியரசுக் கட்சியார் ஆளும் இக்காலத்தில் ஒவ்வொரு மாகாணத்திலும் படிப்பின்மையைப் போக்க என்ன நடக்கிறது என்று பாருங்கள் :—

பீகார் (Bihar) மாகாணத்தில் 26—4—1937 முதற்கொண்டு படிப்பின்மையை ஒழிக்க ஆரம்பித்து இதுவரை 8479 முதியவர் கல்விப்பாடசாலைகள் (Adult Education centres) நிறுவியுள்ளார்கள். இவைகளில் இதுவரை 3, 19,983 முதியவர்கள் படித்தவர்களாக ஆய்விட்டார்கள். சிறைச்சாலையிலுள்ள கைதிகளில் 5,076 பேர்களும் படித்தவர்களாக ஆய்விட்டார்கள்.

ஐக்கிய மாகாணத்தில் (U. P.) 15-4-39 முதற்கொண்டு முதியவர் கல்வி விஷயம் ஆரம்பம் செய்து, "ஒரு வருடத்துக்குள் ஆளுக்கு ஒருவரையாவது படித்தவனாகச் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் ஒவ்வொருவனும் அந்தச் செலவுக்காக ரூபாய் 2-கொடுக்க வேண்டும்" என்று மாகாண கவர்னர் அவர்களும் ஏனைய அறிவாளிகளும் தீர்மானம் செய்துள்ளார்கள்.

" They have promised to make at least one man or woman literate within a year or to pay Rs. 2. the minimum cost of making an illitereate adult literate".

இதுவரை 48 ஜில்லாக்களில் முதியவர் கல்விப் பாடசாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. மேலும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

பம்பாய்மாகாண முதன்மந்திரியார் திரு. பி. ஜி. கேர் என்பவர் சொல்லுவதாவது:—Ignorance is the root cause of many of the evils from which our country suffers. Let our slogan be hundred percent literacy in 2 years, so that the census of 1941 may record figures, which will be the envy of the whole country".

என்று கூறுகிறார். ஆதலின், அவர் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் படிப்பின்மையை மாகாணத்தை விட்டுத் துரத்த வேலை செய்துகொண்டு இருக்கிறார் என்று தெரிகிறது. அவருக்குத் துணையாகப் பம்பாய் ஸோஷல் ஸர்விஸ் லீக் என்னும் சங்கம் 573 முதியவர் கல்விப் பாடசாலைகள் ஸ்தாபித்துள்ளது. பூனாவிலுள்ள ஸெண்டரல் கோவாப்பரேட்டிவ் பாங்க் கர்த்தர்களும் 25 முதியவர் கல்விப் பாடசாலைகள் நிறுவியுள்ளார்கள். ஆதலின் பம்பாயில் மும்முரமாக இது விஷயத்தில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

பஞ்சாப் மாகாணத்திலும் படிப்பின்மையைப் போக்க வேலைகள் ஆரம்பமாய் விட்டன.

நம் சென்னை மாகாணத்தில் அவ்விதமான ஏற்பாடுகள் நடைபெறவேண்டும்.

VII. தானே தமிழ்கற்கும் முறை

நம் சென்னை மாகாணத்திலும் முக்கியமாகச் சென்னையிலும் முதியவர் கல்வி விஷயமாக ஆக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தோடு ஒத்து உழைப்பதற்கு இந்தச் சமயத்தில் **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்** முன்வந்துள்ளார்கள். ஏனைய சங்கங்களும் அவ்வாறு முன்வர வேண்டும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதியவர் கல்வி விஷயமாகத் "**தானே தமிழ் கற்கும் முறை**" என்ற ஒரு நூலைப் படங்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தியுளது. இந்நூலின் அருமை பெருமைகளைப்பற்றி மந்திரியார் **டாக்டர் P. சுப்பராயன்** அவர்களும் ஏனைய அறிஞர்களும் வியந்து பேசி அபிப்பிராயங்கள் கொடுத்துள்ளார்கள்.

இந்நூல் படிப்பில்லாத ஒருவனை ஒரு மாதத்தில் படித்தவனாகச் செய்துவிடும் என்பதில் சந்தேகம் ஒன்றும் இல்லை. இந்நூல் கற்கும் முறையோடு எழுதும் முறையையும் கற்பிக்

கிறது. படிக்கவும் எழுதவும் தெரிந்தால் மாத்திரம் போதாது. செய்தித்தாள்களைப் படித்து உலக அறிவையும், அரசியல் அறிவையும் ஒருவன் பெருக்கிக் கொள்ளவேண்டும். அத்தகைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய விஷயங்களையும் இந்நூல் அளிக்கிறது. இந்நூல் எல்லாவிதங்களிலும் பொருத்த முள்ளதாயிருப்பதால், ஆரம்பப் பாடசாலைகட்கும், முதியவர் கல்விப்பாடசாலைகட்கும் இந்நூல் மிகவும் அவசிய மானது ஆகும்.

ஆதலின், இந்நூலை எல்லோரும் ஆதரிப்பதுடன் அரசாங் கமும் ஆதரித்துப் படிப்பின்மையைப் போக்க ஆண்டவன் அருள்செய்வாரென்று நம்புகிறேன்.

பேசும் மலர்

மலர்கள் கண்ணிற்கு இன்பம் பயப்பனவே யன்றிக் காதிற்கு இன்பம் பயப்பனவல்ல. இதுவே உண்மையாயினும், படகோனியாவி லுள்ள ஹறபஃப்ளோர் என்ற ஒரு வகை மலர் தன்னுடைய மழலைப் பேச்சினால் இன்பம் பயப்பதாகக் கூறப்படுகிறது. அம்மலர் பொழுது விடியுங்காலை தொடங்கி மாலைவரையில் "கொல கொல" வென்று பேசிக்கொண்டிருக்கிறதாம். அதனைக் கேட்டவர்கள் அவ்வொலி பலர் பேசுவதுபோலிருக்கிறதென்று கூறுகின்றனர். அவ்வூர் மக்கள் அம்மலரின் பேச்சுகளிற் சிலவற்றின் பொருளைத் தாங்கள் தெரிந்துகொள்ளக்கூடும் என்று கூறிக்கொள்கின்றனர்.

அம்மலரின் பொருத்துவாயான ஆர் (Calyx) அம்மலரின் இதழ் களோடு உராய்வதால் விந்தையான இவ்வொலி உண்டாகிறதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இம்மலர் தென்னமெரிக்காவிலுள்ள ஆண்டீஸ் மலையடிவாரத் தில் ஏராளமாகப் பூக்கிறதாம்.

திரிசூலம்

[திருவரங்க நீலாம்பிகை அம்மையார்]

சென்னைக்குப் பதினான்கு கல் தொலைவில் பல்லாவரம் என்னும் ஓர் ஊர் இருக்கின்றது. இவ்வூர் முன்னாளிற் பல்லவ அரசரின் ஆட்சியில் இருந்தமையால் பல்லவபுரம் எனப்பெயர் பெற்றது. பல்லவபுரம் என்பது பல்லாவரம் என மருவிற்று. இவ்வூர்ப் புகைவண்டி தங்குநிலைக்கு முக்காற் கல்லுக்குள் **திரிசூல**மென்ற ஒரு சிறு ஊர் இருக்கின்றது. இது முன்னாளில் 'திருச்சுரம்' என வழங்கப்பட்டதாகும். இவ்வூரில் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்னே, விக்கிரம சோழனாற் கருங்கல்லாற் கட்டப்பட்ட சிவபெருமான் கோயில் ஒன்று மிகவும் அழகாகப் புறமதில்களோடு அமைக்கப்பட்டிருக்கின்றது. நான்மறைகளும் சிவபெருமானைத் தன்னகத்தே போற்றி வைத்திருத்தல் போல, நான்கு அழகிய மலைகளினிடையே இத் திருக்கோயிலுங் காண்போர் உள்ளத்தைக் கவரத்தக்க நிலைமைத்தாய்த் திகழ்கின்றது.

இந் நான்கு மலைகளுள் ஒருமலை கோயிலின் மேற்பக்கத்தில் உள்ளது. அதன் அடிவாரத்தில் ஒரு சிறு ஊர் உண்டு. அச் சிறு ஊரில் சில வீடுகள் சிறியனவாகவும், அழகாகவும், வரிசையாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. அம் மலைமேல் துலுக்கர் வழிபடும் பள்ளிவாசல் மிகவும் அழகிய அமைப்போடு அமைந்திருக்கின்றது. மலையின் அடிவாரத்திலிருந்து பள்ளிவாசலுக்குப் போவதற்குச் சிறிது ஒழுங்கு படுத்தப்பட்ட வழியும் உண்டு. கோயிலுக்குக் கீழ்ப்பக்கத்து மலையின் கீழ்ப்புறத்தே ஆங்கிலப் படைஞர் ஆங்காங்குப் போர்ப்பயிற்சி செய்வது காண்டற்கு இனிதாயிருக்கும். தென் பக்கத்து மலையிற் பாண்டவர்கள் தங்கியிருந்து கொண்டு மயிலாப்பூரில் சிவ வழிபாடு செய்துகொண்டு வந்தார்களென்றும், அவ்வடையாளங்கள் இப்பொழுதும் அம்மலைப் பாறைகளிற் காணப்படுகின்றனவென்றும் கூறுகின்றார்கள். பாண்டவர் இருந்த அம் மலைக்குகை ஒன்றில் இப்போது துலுக்கர் தம் இறைவனை வைத்து வழிபடுகின்றனர். கோயிலுக்கு மேற்புறத்துள்ள மலையின் தென்புறத்தில் ஒரு துறவோர்க்காகக் கருங்கல்லினால் நீண்ட நாளுக்குமுன் கட்டப்பட்ட ஒரு சிறு மண்டபம் அகன்றதொரு மேடையின் மேல் ஆலமர நிழலில் அமைந்திருக்கின்றது. நாங்கள் ஒருகால் வெயிலிற் களைப்புற்றுச்

சென்று அம்மேடையின்மீது உட்கார்ந்து இனிய காற்று வீசப் பெற்றேமாய்ப் பெருமகிழ் வெய்திேனும். பின், அம் மேடை மீதிருந்து, நாற்றிசையும் நோக்க, வான் கவிந்த நீனிறக் கடலும், அப்பெரு நீரிலோடும் நீராவிக்கப்பலும், அக் கடலருகே அமைந்திருக்கும் கலங்கரை விளக்கமும் எம் கண்களுக்குப் புலனாகி எங்களை உவகைக் கடலில் மூழ்கச்செய்தன.

கோயிலுக்குப் பின்னுள்ள மலையின் தென்புறத்து அடிவாரத்தில் தனித்ததொரு தோப்பில் பச்சையம்மன் என்ற ஒரு சிறுதெய்வத்தின் கோயில் கட்டப்பட்டிருக்கின்றது.

அம் மலைகள் நான்கினும் கல் எடுப்போர் ஆங்காங்குத் தொழில்புரியும் சிறுசிறு கூட்டத்தினரா யிருப்பதைக் காண்பதோடு, அவர்தாம் அப்பெரும் பாறைகளை வெடி மருந்து வைத்துத் தகர்க்கும் ஒலிகளையுங் கேட்கலாம்.

அம் மலைகளைச் சுற்றிக் கல்லெடுத்த பெரும் பள்ளங்களில் நீர் நிறைந்திருக்கும்; அவ்வழகான தோற்றம் அவ்வழிப் போவாரை மிக மகிழச்செய்யும். இவ்வளவு அழகிய தோற்றங்களையும் சூழப்பெற்றத் 'திரிசூல'மென்னும் இச்சிற்றூரும் குளிர்ச்சியான தோப்புகள் உடையதாயும், தெளிநீர்க்குளமொன்று அமையப் பெற்றதாயும் விளங்குவதோடு, கோயிலுக்கருகே ஒருபெரிய சத்திரமும் வாய்ந்ததா யிருக்கின்றது. அக்கோயிலில் முன்மதிலின் அகத்தும் புறத்தும் ஒரு கிணறுண்டு. அக்கிணற்று நீரின் சுவை இளநீர்க்கே ஒப்பாம்.

வெளியேயிருந்து காண்போரும் எளிதில் மகிழத்தக்க ஒளி பொருந்திய இடத்தில் இறைவன் அருளுருக்கொண்டு விளங்குகின்றார். இறைவியின் வடிவும் வனப்பு மிக்கதாயிருக்கின்றது. இத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு வழிபாடு செய்யும் திருச் சரவணக்குருக்கள் மிகவும் நல்லியல் புடையவர். புலித்தோல் மறைத்துப் புல் மேயும் ஆவைப்போல் உள்ளன்பின்றித் திருக்கோயில்கட்கு வருவோரை வருத்திப் பணம் பறித்து இறைவர்க்குப் போலி வழிபாடு செய்யும் ஏனைக் குருக்கள் போலாகாமல், அக் குருக்கள் கோயிலுக்கு வருவோரை அன்போடேற்று, மனங்கசிந்து இறைவர்க்கு வழிபாடு செய்யும் இயற்கையுடையவர். இவ்வரிய சிவபிரான் கோயில் பல்லாவரம் என்னும் நகரத்திற்கும், அதனைச்சூழ்ந்த சிற்றூர்கட்கும் அருகே அமையப்பெற்றிருந்தும், இவ்வூர்களிலுள்ள ஒரு சிலரைத்தவிர, ஏனையோரெல்லாம் அத் திரிசூலமென்னும் பெயரையுங்கூடச் சொல்லத்

தெரியாதவர்களா யிருக்கின்றனர். ஆனால், திரிசூலத்திற்குப் பக்கத்திலுள்ள முற்குறிப்பிட்ட பச்சையம்மனுக்கு ஆண்டுக்கு ஒருமுறை செய்யும் விழா நாட்களில் கணக்கற்ற ஆடுகோழிகள் தம் இன்னுயிரைத் துன்பத்தோடிழந்து குருதிவெள்ளத் திற்றோய்ந்து துடிதுடித்து மூழ்கிக்கிடக்கும். ஆ! இவ்வரிய குருதிக்காட்சியினைக் கண்டு களிக்கும் பொருட்டுப் பெருந்திரளான மக்கட்டொகுதி பல ஊர்களினின்றும் வராநிற்கும். இப்பெருந்தொகையான மக்கள், உயிர்க்கொலையின்றித் தூய நினைவோடும், தூய செயலோடும், இத்திரிசூல மென்னும் சிவபெருமான் திருக்கோயிலுக்கு வரப்பெறும் பெரும்பேற்றை அடைவார்களானால் எத்தனையோ ஆடுகோழிகள் தம் இன்னுயிர் தப்பிப்பிழைக்கும். அம்மாந்தரும் எவ்வளவு நல்வினையடைவார்கள்! இக்கட்டுரையைக் கண்ணுறும் அறிவுடையோர் இத் 'திரிசூல'மென்னும் அருட்கோயிலுக்குச் சென்று அவ்விறைவனை வணங்குவாரென நம்புகின்றோம்.

மல்லிகைப் பூ

1. மல்லிகை வெண்ணிறப்பூ—மயிலே
மாலை மலரும் பூ
மெல்லிதழ் சேர்ந்த பூ—மயிலே
மேலடுக் குள்ள பூ

2. மாலை இளந் தென்றல்—மயிலே
வந்து மலர்த்தும் பூ
நாலு திசைகளிலும்—மயிலே
நறுமணந் தரும் பூ

3. செல்வர் விரும்பும் பூ—மயிலே
தேவர்க் குகந்த பூ
மெல்லியல் மங்கையர்கள்—மயிலே
விரும்பிச் சூடும் பூ.

—பெ. கோ.

தமிழ் எழுத்தின் தனிச் சிறப்பு

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

I

உலகில் மிகப் பழைய மொழிகளிற் சிறந்தது நமது தமிழ் மொழி. இது ஒருகாலம் திபேத்து முதல் கீழிந்தியத் தீவு வரையில் பரவியிருந்தது. இன்று அதன் எல்லை சுருங்கினாலும் இளமையும் ஏற்றமும் சுருங்கவில்லை. ஆரியம், யூதம், பாலி, இலத்தீன், கிரேக்கம் முதலிய தொன்மொழிகள் நூல் வழக்கில் இருக்கின்றன; பேச்சு வழக்கில் இல்லை. தமிழ் ஒன்றே அன்றிருந்ததுபோல் இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது. இக்காலம் விரிந்து பெருகி உலகெங்கும் வரவேற்றுப் போற்றப் பெறும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மானியம் போன்ற வீறுபெற்ற மொழிகளைப்போலத் தமிழும் வளர்ந்தோங்க முடியும். நந் தமிழுக்கு அத்தகைய திட்பமும், நெகிழ்ச்சியும், நயமும் உண்டு. இந்திய மொழிகளில், தற்போது சிறப்புற்ற இந்துஸ்தானி, வங்கம், குசராத்தி, மராத்தி முதலிய மொழிகளைத் தமிழ் வென்றோங்குவது பெரிதன்று. ஏற்கெனவே இம்மொழிகளுக் கில்லாத அருட்சிறப்பு தமிழுக்குண்டு. தமிழருக்கு வினைத்திட்பமும், மனத்திட்பமும் பெருகவேண்டும். தமிழர் தமது நாடு, மொழி, கூட்டம் இவற்றை மேன்மேலும் வளர்க்க முன்வந்து முயல வேண்டும்.

ஆங்கிலமும், பிரெஞ்சும் உலகளாவிய மொழிகளானதேன்? தேம்ஸ் ஆற்றங்கரையிலும், ரைன் ஆற்றங்கரையிலும், நேற்றுப் பிறந்த பிறமொழிகள் உலகை யாள முடியுமானால், முன்னூறாண்டுகளுக்கு முன்பே எழுந்த இந்துஸ்தானி இந்திய மொழியாக முடியுமானால், பதினாயிரம் ஆண்டுகள் இலக்கிய இலக்கண வளமையுடன் விளங்கிய நமது அருமைத் தாய் மொழி உலக மொழியாகத் தடையுண்டோ? அவ்வாறு ஆகும் தகுதி தமிழுக்குண்டு. அதை அவ்வாறு போற்றி வளர்க்கும் தகுதி தமிழருக்கு வரவேண்டும். உலகையாள உரிமை கொண்ட ஓர் அரசி சிறையில் வாடுவதுபோலே, நமது தமிழரசி, மைந்தரின் அசட்டையால், இன்று சென்னைக்கும் குமரி முனைக்கும் இடையே சிறைப்பட்டு உயிர் துடிக்கிறாள்.

ஏதோ பத்துக் கதைகளும், சிந்துப் பாட்டுகளும் வெளிவந்துவிட்டால் தமிழ் வளர்ந்துவிடாது. தற்காலம் செய்தியிதழ்களிற் காணப்படும் கொச்சைத் தமிழ் இலக்கியத்திற் புகுந்து விரிந்தால், இன்னும் சில ஆண்டுகளில், தமிழ் தனது தனிச் சிறப்பை இழக்கும். தமிழுக்கே உரிய பல மொழிகள்

மறைந்துபோகும். சங்கத் தமிழ் பொதுமக்களுக்கு விளங்காமற்போனதுபோலே, இன்றுள்ள தமிழும் பிற்காலத்தவருக்கு விளங்காமற் போகும். தமிழிலிருந்து மலையாளம்போலே ஒரு புதிய மொழி உண்டாகும். அதில் இன்று வழங்கும் கொச்சைக் குப்பைகளெல்லாம் சேரும். இவ்வகையே இலத்தீன் மொழி கொச்சையாகி பிரெஞ்சு, இத்தாலி முதலிய புதிய மொழிகளாக விளங்குகிறது.

தமிழர் செய்யவேண்டிய முதன் முயற்சி, எழுதுந் தமிழையும் பேசுந் தமிழையும் இயன்றவரையில் ஒன்றாக்குவதேயாகும். பிழையறப் பேசவும் எழுதவும் தமிழர் பயிலவேண்டும். கொச்சைத் தமிழும், அசுத்த நடையும் நீங்கவேண்டும். அதற்கொரு இயக்கம் தோன்றவேண்டும்.

தமிழில் ஏராளமான திசைமொழிகள் புகுந்துள்ளன; பிற மொழிகளிலும் அவ்வாறே. ஆங்கிலத்தில் கணக்கற்ற பிறமொழிகள் நாடோறும் கலந்து, அம்மொழியை எல்லையற வளர்த்தன. இப்போது உலகெங்கும் ஆங்கிலத்தைப் பரப்பி அதையே மாந்தருக்குப் பொதுமொழியாக்கப் பெரு முயற்சி செய்து வருகின்றனர். உலக மொழிகள் அனைத்தையும் ஆங்கிலத்தில் எழுத முயலுகின்றனர். எடுத்துக்காட்டாக, பாரஸி, உருது, அரபி முதலிய மொழிகளை ஆங்கில எழுத்துக்களாலேயே கற்க நூல்கள் உள்ளன. ஆங்கில எழுத்துக்களில் ஒலிக் குறைகள் ஏராளமாயுள்ளன. எனினும், ஒலிக்குறிகள் (அக்ஸெண்ட்ஸ்) போட்டு, எப்படியோ பிறமொழிகளை அதில் எழுதுகின்றனர். அதனால் ஆங்கிலம் ஒன்றே அறிந்தவர், பிற மொழிகளையும் கற்க இயலும். இப்போது உலகிற்கு இத்தாலிய எழுத்துக்களால் வழங்கும் ஐரோப்பிய வரிவடிவையே பொது எழுத்தாக்க முயலுகின்றனர். நமது நாட்டில் தேவநாகரி எழுத்தை நாட்டுப் பொது எழுத்தாக்கக் காந்தியடிகள் முயலுகிறார்.

நாம் ஏன் தமிழை அவ்வாறு பொது எழுத்தாக்கக் கூடாது? வடமொழிக்குள்ள உரிமை இந்நாட்டின் தொன்மொழியான தமிழுக்கில்லையா? இக்கேள்வியைக் கண்டு பலர் நகைப்பர். "தமிழாவது, எழுத்தாவது, பொதுவாவது! முதலில் தமிழர் தமிழை நன்கறியட்டும்; பிறகு நீர் நாட்டையும் உலகையும் வளைக்க மனக்கோட்டை கட்டலாம்" என்பர் சிலர். தமிழைத் தீண்டாமொழி என்று வெறுக்கும் வடநாட்டாரும் உளர். அவர் "உங்கல் டமில் பொக்கைவாயன் கொட்டைப்பாக்குக் கடிப்பதுபோலவே கொட

கொடா என்றிருக்கிறது. இந்தி, மராதி, குசராத்தி, வங்கம், முதலிய மொழிகளில் உள்ள உரப்பு அதிலில்லை. எங்கள் தாய் மொழியைக்கொண்டு உலக மொழி யனைத்தையும் எழுதலாம். தமிழைக்கொண்டு வடமொழியை எழுத முடியாதே. வல்லி னத்தில் நான்கெழுத்துக்களில் ஒன்றே தமிழில் வழங்குகிறது. மற்றை மூன்றெழுத்துக்களுக்கும் ஒலி யில்லையே. ஆதலால் தமிழ் அரைகுறை மொழி; ஒலிநிறைவற்றது. சென்னையைத் தாண்டி அது அடியெடுத்து வைக்க முடியாது. இங்கேயும் இந்தி வந்துவிட்டது. இந்தி ஆங்கிலம் இரண்டறிந்தால் நாடெல்லாம் பேசலாம். தமிழைக்கொண்டு என் செய்வீர், பேதையீர்? மேலும் உங்கள் மொழியில் भावम् பாவமாகிறது. सर्वम् சருவமாகிறது.'' என்றெல்லாம் கடுமையாகத் தாக்கு வார் சிலர். அனைத்தையும் கேட்டுக்கொண்டு, தமிழன் வாய் மூடிச்செல்வதா? 'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும்' என்று பழம்பாட்டைப் பாடி மகிழ்வதா? தொல்காப்பி யத்தைக் காட்டிப் பெருமை பேசுவதா? அல்லது 'நமக்கேன் வம்பு' என்று காவேரிக் கரையிலும், வைகைக் கரையிலும், பொருனைக்கரையிலும் உறங்குவதா? தமிழன் தமிழின் பெருமையை ஆராய்ந்து, பிறமொழியாளருக்குத் தக்க விடை யளிக்க வேண்டும். ஒரு ஆங்கிலேயர் நமது மொழியைப் பற்றிப் புகழ்ந்தால் அதைக் கேட்டுக்கொண்டு நாமும் மகிழ்ந்து சும்மா இருக்கிறோம். 'நமது தாய்மொழியின் அருமை பெரு மைகளை ஆராய்ந்து நாமும் ஏன் உலகில் தலை நிமிரக்கூடாது?' என்ற வீறுடன் தமிழர் தலை நிமிர்ந்து முன் வரவேண்டும்.

தமிழைப்பற்றிக் கண்ட கேள்விகள் கேட்டுக் குறைசொல் லும் பிறமொழியாளருக்குத் தமிழன் இவ்வாறு விடை யளிக்க வேண்டும்:—"அன்பரே, பொக்கைவாயன் வெல்லச்சீடை புளிப்பு என்பதுபோலிருக்கிறது நீர் தமிழைக் குறை சொல் லுவது. தமிழின் சுவை யறிந்தால் அப்படிச் சொல்ல மாட்டீர். எமது மொழியில் ஒலிக்குறை யிருப்பதாகச் சொன்னீர். தமிழுக்கு வேண்டிய ஒலிகள் இங்கே யுண்டு. தமிழ் தனிச் சிறப்புள்ள மொழி. அது பிற மொழிகளிடம் கடன் வாங்க நேர்ந்தால், கடன் தொகையையும் முதலாகக் கொண்டு வளம் பெறும் திண்மையுடையது. திசை மொழிகளைத் தமிழ் தன தாக்கிக் கொள்ளுகிறது 'தர்மம்' என்பதைத் 'தருமம்' என்றும், 'ஸ்வதந்த்ரம்' என்பதைச் 'சுதந்திரம்' என்றும் தமிழ் வழங்குவது அதன் தனிச் சுயேச்சையைக் குறிக்கிறது. தமிழில் கசடதபக்களில் ஒரே ஒலிதான் இருக்கிற தென்றீர்.

தமிழ் பேசுவதற்கு மற்றவை வேண்டாவாம்; எனினும், தமிழ் மொழியமைப்பிலேயே மற்ற மூன்றொலிகளும் நிரம்புகின்றன. எடுத்துக் காட்டாக, 'கங்கை' என்பதில், ஙகரத்திற்குப் பின் வரும் ககர ஐகாரத்தை இயல்பாகவே மென்மையாக மூன்றாம் க போலே ஒலிக்கின்றோம். அதற்குப் புதிய எழுத்தொன்றும் வேண்டா. எனினும் நிறைவாக மொழியவும் வழியுண்டு. எழுத்துக்களைப் பெருக்குவது நலமன்று. சில எழுத்துக்களில் பல பொருளை விளக்கும் மொழியே உயர்ந்த மொழி. அவ்வகையில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடி தமிழையே சொல்ல வேண்டும். கூட்டெழுத்துத் தொல்லையில்லாமல் நிற்கும் இந்திய மொழி தமிழ் ஒன்றே. வங்கம், இந்தி, குசராத்தி, தெலுங்கு, மலையாளம் முதலிய பிறமொழிகளெல்லாம் இன்று வடமொழியைத் தழுவி வரிவடிவையும் இலக்கணத்தையும் ஆக்கிக்கொண்டுள்ளன. அவற்றின் எழுத்தைக் கற்பது பெரும் வேலையாயிருக்கிறது. கூட்டெழுத்து மிகவும் தொந்தரையாயிருக்கிறது. தமிழ் முப்பது எழுத்துக்களில் முத்துக்கோத்தாற்போலிருக்கிறது. அதற்கே இன்று கையச்சு ஏற்பட்டு எளிதாக வழங்குகிறது."

"தமிழில் ஒலியில்லை, வடமொழி தமிழில் வழவழா வென்றுகிறது" என்று நீர் இழிவுரை பேசுகிறீர். உமது வடமொழியிலும், இந்தியிலும் ஒலிக்குறைவுகள் ஏராளமாக உண்டு. எடுத்துக் காட்டாக, நாம் 'புளி' என்றால் நீர் 'புலி' என்பீர், 'வாழ்' என்றால் 'வால்' என்பீர். 'எத்து' என்றால் 'ஏத்து' என்பீர். மொழிவதிலும் உம்மிடை எத்தனையோ தொல்லைகள் உண்டு. இந்தியில் **जितना** என்றெழுதுவீர்; ஜித்ந என்று அகரத்தை விழுங்கி ஒலிப்பீர். தேவநாகரியைக்கொண்டு உலகெழுத்தெல்லாம் எழுதிவிடலாம் என்பர் சிலர். ஆங்கிலத்தை அவ்வாறு எழுதொணாது. F, Z போன்ற ஒலிகளைத் தேவநாகரியில் எழுத முடியுமா? சில அராபி, பார்ஸி ஒலிகளுக்குத்தேவநாகரியில் எழுத்தில்லை. புள்ளிபோட்டுச் சரிபண்ணுகிறார்கள்.

பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளில், எழுத்திற்கும் ஒலிக்கும் வேற்றுமை அதிகம். காதாற் கேட்டுக் கேட்டே சில மொழிகளை மொழிய வியலும். மேலும் ஐரோப்பிய மொழிகளின் உச்சரிப்பைக் கற்பதற்கே பல்லாண்டுகள் செல்லுகின்றன. ஒலியிலக்கணம் கற்றபிறகே நல்ல உச்சரிப்பு வரும். மேனாட்டு மொழிகளில், உச்சரிப்பைப் போல ஏறக்குறைய இரண்டுமடங்கு எழுத்துக்கள் சொற்களிற் புகுந்துள்ளன. சொற்களை எழுத மிகத்தொல்லையா

யிருக்கிறது. அதிலும் பிரெஞ்சு, மொழியிலுள்ள எழுத்துக்களுக்கும் உச்சரிப்பிற்கும் உறவேயில்லாமல் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, 'எரோ' என்ற இரண்டொலிகளுக்கு heureux என்று ஏழெழுத்துக்கள் எழுதவேண்டியிருக்கிறது. மேனாட்டு மொழிகளை எப்படி எழுதுகிறோமோ அப்படி இயம்ப முடியாது. எழுத்துச் செட்டில்லாமல் அம்மொழிகள் வளர்ந்திருக்கின்றன. இந்தியிலும் இதே சங்கடம் உண்டு. रखकरे என்று எழுதி 'ரக்கர்' என்று மொழிவர். தமிழில் இந்த இடர் கிடையாது. அதை எப்படி எழுதுகிறோமோ அப்படியே மொழிகிறோம்.

பிரெஞ்சு, இலத்தீன், ஆரியம், இந்துஸ்தானி, குசராத்தி முதலிய மொழிகளில், அஃறிணைப்பெயர்களுக்கெல்லாம் பால் வேறுபாடுண்டு. தாரா, பார்யா, கலத்ரம் இம்மூன்றும் மனைவி என்ற பொருள்கொண்டன. மனைவி பெண்பால். ஆனால் வடமொழியில் தாரா ஆண்பால், பார்யா பெண்பால் கலத்ரம் ஒன்றன்பால்! இது இயற்கைக்கு எவ்வளவு முரணாயிருக்கிறது! இப் பால் வேறுபாடு முற்றிலும் பொருளற்றது; வீண்தொல்லை தருவது. இதனால் இம்மொழிமாணவர் மிகவும் வருந்துகின்றனர். கல்லும், புல்லும், மேசையும், நாற்காலியும், ஆடையும், சட்டையும் ஆண்பாலா பெண்பாலா என்று பார்த்துக்கொண்டிருப்பது எவ்வளவு நகைப்பிற்கிடமான வீண் வேலை என்று யாவரும் உணரலாம். இந்தத் தொல்லை தமிழுக்கில்லை. தமிழில் பால்வேற்றுமையை இயல்பாக அறியலாம். சில எழுத்துக்களில், பலபொருள்களை முரணில்லாமல் பகுத்தறிவிற்குப் பொருத்தமாக, எழுதியபடியே உரைப்பது நமது தமிழ். இதனாலேயே தமிழ் உலகமொழியாகத் தகுதி பெற்றுள்ளது என்று துணிந்து கூறுவோம். தமிழர் இதை நன்றாக உன்னிப்பார்க்கவேண்டும். ஒரு அத்லாந்திக் தீவில் நேற்றுதித்த மொழி, இன்று உலகமொழியாவதானால், பதினாயிரம் ஆண்டுகளாக இலக்கிய இலக்கணத்துடன் விளங்கும் தமிழ்மொழி ஏன் உலக மொழியாகக் கூடாது?

மற்ற வரிவடிவங்களில் உள்ள குறைகள் தமிழில் இல்லை. எனினும் பிறமொழி ஓசைகளைத் தமிழில் எழுதுவதாயின் சில திருத்தங்கள் வேண்டும். அதற்காக எழுத்துக்களைப் பெருக்கக் கூடாது. பிரெஞ்சில் ஒலிக்குறிகள் உள்ளதுபோல, தமிழிலும் புள்ளியும் கோடும் போட்டுப் பிறஒலிகளை நிரப்பலாம். புள்ளி, கோடு (.—) இரண்டால் இந்தி, வங்கம், மராதி, குசராத்தி, வடுகு, கன்னடம், மலையாளம் ஆகிய எல்லா இந்திய மொழி

களையும், ஆரியத்தையும் தமிழிலேயே எழுதலாம். தமிழிடைப் பிறந்த வடுகு, கன்னடம், மலையாளம் முதலியவற்றையும் இன்று ஆரியத்துடன் சேர்த்துப் பேசவேண்டிய நிலை வந்தது வருந்தத்தக்கது. தமிழ் ஒன்றே தனிமொழியாக நிற்கிறது. றகரம், தமிழில் உள்ள சிறப்பெழுத்துக்களான ழகரம், ஆய்தம், இவற்றைக்கொண்டு ஆங்கிலம், உருது, பார்ஸி, பிரெஞ்சு, ஜர்மன் முதலிய மொழிகளைத் தெளிவாக எழுதலாம். மேலும், உலகமொழிகளில் எளிதாக எழுதக்கூடியன உருதுக்குப் பிறகு தமிழேயாம். அகரத்திலேயே பிற எழுத்துக்களின் வடிவெல்லாம் அடங்கியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, அகரத்தில் எ, ம, க, த, ற, ச முதலிய வடிவங்கள் அடங்கியிருப்பதைப் பார்த்தவுடனே அறியலாம். இன்று மற்றை இந்திய மொழிகளெல்லாம் ஆரிய ஒலிகளைத் தழுவியுள்ளன. ஆதலின் புள்ளியும் கோடுமிட்டு ஆரியவொலிகளை எழுதினல், எல்லா இந்திய ஒலிகளையும் எழுத முடியும். அது எவ்வாறெனை அடியிற்காணும் அட்டவணை விளக்கும். வடமொழியில் வழங்காத எழுத்தொலிகளும் உண்டு. ஓரிரண்டு வார்த்தைகளே கொண்ட எழுத்துக்களும் உண்டு. அனைத்தையும் அட்டவணையிற் காண்க.

வட—தென்மொழி எழுத்துக்கள்

உயிர்

अ	அ	उ	உ	ए	எ	अं	அ.
आ	ஆ	ऊ	ஊ	ऐ	ஐ	अः	அ:
इ	இ	ऋ	ரு̣	ओ	ஓ		
ई	ஈ	ऌ	லு̣	औ	ஔ		

மெய்

क	க	ञ	ஞ	ध	த̱	ऌ	ல
ख	க̤	ट	ட	न	ந	व	வ
ग	க̣	ठ	ட̤	प	ப	श	ச
घ	க̱	ड	ட̣	फ	ப̤	ष	ஷ
ङ	ங	ढ	ட̱	ब	ப̣	स	ஸ
च	ச	ण	ண	भ	ப̱	ह	ஹ
छ	ச̤	त	த	म	ம	क्ष	க்ஷ
ज	ஜ	थ	த̤	य	ய		
झ	ஜ̱	द	த̣	र	ர		

இவற்றுள் குறிசேர்த்த எழுத்துக்கள் ரு லு அ. அ: க க, க, ச ஜ ட ட ட, த த த ப ப ப ஆகப் பதினெட்டேயாம். வடமொழியில் எ, ஒ, ஃ, ண, ற, ள, ழ இல்லை. இவற்றின் பயனைப் பிறகு அறிவோம்.

இவ்வெழுத்துக்களைக்கொண்ட தொடர்மொழிகளைக் காண்க.

ஆரியம்

नासतो विद्यते भावः

நாஸதோ வித்யதே பாவ :

गतासू नगता सूंश्च नानु शो चन्ति पण्डिताः

கதாஸு நகதா ஸூம்ஶ்ச நாநு ஶோசந்தி * பண்டிதா:

* பண்டிதா: என்பதில் மெல்லினத்திற்குப் பின்வரும் டகரம் இயல்பாகவே மெல்லோசை தருவதால் புள்ளிவேண்டாம். அதுபோலவே அண்டம், கங்கை முதலியவற்றிலுமாம். **कण्ठम्** என்பதில் மெலிக்குப்பின் வல்லினம் உரத்தொலிக்றது. அப்போது டகரத்தை ட என்றெழுதலாம் (கண்டம்)

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणम् व्रज

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ

இந்தி

सुख चाहते होतो अपनी अहंताको भूलकर चलो

ஸுக் சாஹதே ஹோதோ, அபநீ அஹந்தாகோ பூல்கர் சலோ

विनाप्रेमके आनन्द मिलनहीं सकता

விநா ப்ரேம்கே ஆனந்த் மில் நஹீம் ஸக்தா

வல்லரசு

[கோபாலே நெல்லையப்பன்]

(முன் உ௬௮-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சி உ.

இளங்கோ துறவு

(உறையூர் அரண்மனையில் சோழன் பெருநற்கிள்ளி தன் படைத் தலைவனுடன் தனித்து உரையாடிக்கொண் டிருக்கின்றான்.)

நன்னன் :—(இளவரசை நோக்கி) இறைவ! திறலுறு நம் வேந்து பொருபடைத் துணைவலி கொண்டு பகையோடு பொருதார். எனினும் அந்தோ! நம் கொற்றவர் விதி வயத்தால் தம் பொல்லா வல்லுயிர் துறந்தார். அதுபற்றி என் உளம் படும்பாடு என் உளமே யறியும். நிற்கபெரும! இதுபோது வெம்பகைவர் செய்கொடுஞ் சூதினால் தடு மாறுகின்றது என் உள்ளம். நினைதோறும் கலங்குகின்ற தென்னெஞ்சம். கொற்றவ! நொந்த புண்ணிலே வந்திடு கின்றதே நூறிடி. இதற்கென் செய்வது? யாரை நோவது? பண்டை ஊழ்வினையின் செயல் போலும்!

பெருநற் கிள்ளி :—நன்ன! யாது கூறுகின்றனை? எற்குத் தெளி வில்லையே, மறையேல்! விளைந்தவை விரைவில் உரை யாய்!

நன்னன் ;—ஐயோ! என் சொல்வேன். இளவ! தாங்கள் உறையூர்க் கிறைவராய் விளங்குதலைப் பொறுத்தலாற்றி லர் இச்சோழ ரோன்பதின்மரும். ஒழுக்கம் வழுக்கிய நும்ஞாதியர் நும்மேல் அழுக்காறு கொண்டனர். தாங் கள் ஆண்டில் இளையவ ராகையான் மணிமுடி புனைந்திடும் பெற்றியை யுடையவரல்லர் எனத் தங்களைத் தூற்றுகின் றனர் நம் மாற்றலர். நாட்டைக் கோட்டைக் குள்ளாக்கி விட்டனர் அம்மட்டிகள். படையைத் திரட்டி நம்மை மிரட்டுகின்றனர் அத்துட்டர்கள். ஈது உண்மையே. இத னால் என்னெஞ்சம் ஆழ்ந்தது மிக்க கவலையில்.

பெருநற் கிள்ளி :—ஆ! அவ்வாறு? என்னே அம்மானுடர் சிறு மதி! என் சுற்றத்தா ரென்றல்லவோ எண்ணினேன் அம் மன்னரை. நாடோறும் மாறி வேறுபாடுறும் அவர் மனப்பான்மைதான் என்னே! நிலையிலாப் புலையர் ; கதி

யிலாப் பதடிகள்; இருளடை நெஞ்சினர்; ஈரமில் உளத்தர். அறிந்தேன், அறிந்தேன் அக்கயவரை! தந்நயமன்றிப் பின்னொன்றறியாக் காதகர்; கடையர்; கல்வியில் கசடர். இளையவ னென்றும் பாராது என்னை வளைந்தனரே. செவ்விது! செவ்விது! நன்ன, இதற்கென்னே நின் கருத்து?

நன்னன்:—மன்னவ! வீணே வருந்தலை. துயர்வரு மெல்லைத் துயர் நோக்குதலோ பெருமை! அன்று. அன்று. வேந்தே! கொள்கையிற் பிறழா நீதி நம்பாலெனின் யாது அஞ்சுவது? எனினும் இதுபோது சிறுபடை தாங்கும் நாம் பெருந்திறல் மன்னருடன் பொருவது அழகாகா. இதுவரை நாம் நினைத்த தெல்லாம் விழலுக் கிறைத்த நீராயின. போயின போகுக. புதுவழி யொன்று தகுதியாய்க் கருதுவம். பெரும! இக்கிளர் போரிடை நாம் உழலுவோமெனின் உண்மையாய்த் தோல்வி நமதேயாகும். வளவ, யாது செய்வ தெனத் தோன்றவில்லை எனக்கும். இருதலைக் கொள்ளி எறும்பு போலாயினோமன்றோ?

பெருநற் கிள்ளி:—அந்தோ, தலைவிதிமிய! எனக்கு வலக்கை போன்று துலக்கமுற்ற மலையமான் திருமுடிக்காரியும் போர்க்களத்தில் மாண்டனனே. பொருவீரனுய அப் பெருமன்னன் ஒருவன் இத்தருணம் இருந்தால் சாலுமே. மறலியும் வெருவ அரும்போர் ஆற்றுவானே. எம் குலத்தை ஏற்றுவானே. எம்மைத் தூற்றிய அவ்வன்கணுளரைக் காற்ருய்ப் பறக்கச் செய்வானே. ஆ, திருமுடிக்காரி! உன் வீரமே வீரம்! நின் வாழ்வு விண்ணுலகில் சிறக்க! (நன்னனைப் பார்த்து) படைவீர, கொன்னே காலந் தாழ்த்துவதனுல் ஆவதென்? தக்கதொரு மாற்றமுண்டெனின் விரைவில் சாற்றுவாய்?

நன்னன்:—எங்கோவே! அதைப் பற்றியே நானும் உன்னிக் கொண்டிருக்கிறேன். (பின்புறம் பார்த்து) மன்னவ! யாவரோ ஒருவர் வரும் காலடி யொலி எழுகின்றதே. கூர்ந்து நோக்குங்கள்!

பெருநற் கிள்ளி:—ஆம், ஆம். வருபவன் நம் காவலனே. உற்ற செய்தி யொன்று கொணர்கின்ருன் போலும். அஃது எந்நிலையிலிருக்குமோ? (காவலன் அரசனைப் பணிந்து நிற்கின்ருன்.) (காவலனைப் பார்த்து) ஏடா, காவல! யாது விசேடம்? நிகழ்ந்ததென்னை?

காவலன் :—(கைகூப்பி) பெரும! நம்மை வஞ்சித்த அக்கஞ்சுக மன்னர் அரண்மனையைச் சூழ்ந்து கொண்டனர். நாட்டு மக்கள் வீட்டை நெருப்பிட்டுச் சுட்டெரிக்கின்றனர். அடாத பழிகளை விடாது கடாவுகின்றனர். இத்தருணம் நாம் வாளாவிருப்பின் நம்தம் நாடும் அந்தமில் புகழும் அழிந்து விடும். விளையாட்டெனவே வீணுயிருத்தல் தகாது. பகைவர் படை கரையிலாக் கருங்கடல்போன்று காணப்படுகிறது. சடுதியில் தக்கவழி யொன்றும் கடைப் பிடிக்காவிடின் நம்நாடு ஒருகணத்தில் கெடுமென்பது திண்ணம். பெரும! இதைக் கூறவே இவண் வந்தேன்.

பெருநற் கிள்ளி :—நன்று, நன்று. அவ்வாறே ஆற்றுதும். காவல! விரைவில் ஏகுதி. கோட்டை வாயில்களை நன்கு பாதுகாத்துக் கொள்ளுங்கள். யான் வேண்டுவ புரிகின்றேன். (காவலன் மறைகின்றான். தன் படைத் தலைவனை நோக்கி) நன்ன, நாம் கண்ட கனவு நனவாயிற்று. இனி வீணே யிருத்தல் கூடாது. எம் வஞ்சியர்கோன் சேரன் செங்குட்டுவனுக்குத் தூது அனுப்பி வை. நமது எண்ணமும் திண்ணமாய் நிறைவேறும். இதுவே இவ்வமயம் கைக்கொள்ள வேண்டிய நற்செயல். யானும் என் உருக் கரந்து மலையமான் திருமுடிக்காரி வரையில் ஒளித்திருப்பல். அவ்வப்போது நிகழும் போர்ச் செயல்களைச் செவ்விதின் அறிவிப்பாய். ஆகவே, நன்ன, ஒல்லையிற் செல்க. யானும் ஏகுவன்.

(இருவரும் பிரிகின்றனர்.)

* * * *

(சேரன் செங்குட்டுவன் வேட்டையாடும் பொருட்டு மலைப்பக்கம் வந்திருக்கின்றான், உடன் வந்த படைகள் யாவும் ஒருபுற மிருக்கச் செங்குட்டுவன் தனியாக அமர்ந்திருக்கின்றான். அதுகாலை பெருநற்கிள்ளியாலனுப்பப்பட்ட தூதுவன் விரைந்து வருகின்றான்.)

தூதுவன் :—(குட்டுவனைத் தொழுது) எழுதரு மேனி யிறைவ! என் தாழ்ந்த வணக்கம் தங்கட்கு உரித்தாகுக. கொற்றவ! உறையூர் மன்னன் பெருநற்கிள்ளி விடுத்த தூதுவன் யான். ஒத்த பண்பினராய ஒன்பது மன்னரும் தங்கள் மைத்துனர் இளவரசு பொறுது, அவர்தம் ஏவலும்

கேளாது வளநாட்டைக் கைக்கொளத் துணிந்துவிட்டனர். இருவர் படைகளும் ஒன்றையொன்று கைகலக்கின்றன. மன்னவ, போர்தனி புரியில் பிழைப்பர் யார் கொல்? அஞ்சா நெஞ்சர்களின் வெஞ்சமரில் மக்கள் பஞ்சாய்ப் பறக்கின்றனர். எம் வளவர் யாது செய்வதெனத் தேறாது வாதையடைகின்றார். மாபெருமன்ன, இச்செய்தியைக் கூறவே யான் ஓடோடி வந்தேன்.

சேரன் செங்குட்டுவன் :—ஆ, அஃதுண்மையா! எம் மைத்துனருடன் கடும்போர் புரியத் துடுக்குற்றனர்கொல்! (சீற்றத்துடன்) யாண்டுப் பெற்றனர் இத்திறல்? நடைப் பிணமட்டிகள். குட்டுப்பட்ட போதன்றி உண்மை யறியார் அச்சோழர். வஞ்சனைக் கஞ்சா நஞ்சினுங் கொடிய நெஞ்சினரைக் கணப்பொழுதில் விண்ணு டனுப்புதும். முடிபுனை மன்னர்தம் செருக்கை நொடிப் பொழுதில் கருக்குதும். நெஞ்சகம் பிளந்து இந்நெடுவாள் தனக்குக் கொஞ்சமோ ஊட்டுவன் குருதி? இணையிலா அவர்தம் சேனையை எம் ஒரு கணைக் கிரையாக்குதும். இஃது உறுதி, உறுதி. (தன் படைத்தலைவனை விளித்து) பொரு வீர, புறப்படு உறையூர்க்கு. நம் சினத்தின் எல்லையைக் காண்குதும்.

(யாவரும் சோணாடு அடைகின்றனர். செங்குட்டுவன், சோழரொன்பதின்மரையும் போரில் அழிக்கின்றான். அமைதியும் நிலவுகிறது.)

சேரன் செங்குட்டுவன் :—(நன்னனை நோக்கி) படைத்தலைவ, யாண்டுப் புக்கனர் எம் மைத்துனர்? அவரை யீண்டழைக்க.

நன்னன் :—(வணங்கி) விழுமிய வேந்தே! வணக்கம். தாங்கள் இந்நேரம் வந்திராவிடில் யாங்கள் இதுபோது கூற்றுவனுக்கு நல்விருந்தா யிருப்போம். கொற்றவ, இவ்வுதவியை நாங்கள் என்றும் மறவேம். எங்கள் வேந்து பகைவருக் கஞ்சி மலையமான் மலையில் மறைந்திருக்கின்றார். விரைவில் வந்து விடுவார். வரும் நேரமும் அண்மியது.

(அதுபோது பெருநற்கிள்ளி வருகின்றான். செங்குட்டுவனைத் தழுவிக் கொள்கிறான்.)

சேரன் செங்குட்டுவன்:—மைத்துன, இனி நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டுவ தின்று. ஒருவரும் நின்னைவந்து போருக் கழைக்க மாட்டார். அச்சந் தவிர்த்து இச்சையுடன் அரசாள்வாய். ஏதாவது ஏதம் விளைந்திடின் யான் வந்து உதவி புரிவேன். கவலற்க. வெற்றியாய்க் கொற்றம் செலுத்துக. யான் சென்று வருகிறேன்.

பெருநற் கிள்ளி:—இனிதே சென்று வருக. இறைவன் என்றும் அருள் புரிவான். நின்புகழ் எங்கும் ஓங்குக. யான் கூறுவதற் கென்னுள ! என் வணக்கம் யாவர்க்கும் உரியதாகுக. (வணங்குகின்றான்)

(செங்குட்டுவன் தன் படைகளுடன் வஞ்சி யடைகின்றான்.)

காட்சி 3

[சேரன் செங்குட்டுவன் தன் தேவி இளங்கோ வேண்மாளுடன் அரசு கட்டிலில் வீற்றிருக்கின்றான். கழற்சிக்கா யாடி சிறிதுநேரம் போக்குகின்றான். மைந்தன் குட்டுவஞ் சேரலும் அருகில் விளையாடிக் கொண்டிருக்கின்றான்.]

இளங்கோ வேண்மாள்:—(கழல் விளையாடிக்கொண்டே) ஆருயிர்த் தலைவ ! என் உடன்பிறந்தானின் அரசு எந்நிலையிலுளது? உறையூர்ச் சோழர் கொண்ட சீற்றம் பொறையுற்றதா ? நாடு அமைதி கொண்டதா ?

சேரன் செங்குட்டுவன்:—காதற்கொழுந்தே ! என் மைத்துனன் பெருநற்கிள்ளி பகைவருக் கஞ்சி மலையில் ஒளித்திருந்தான். போரும் மும்முரமாகவே நடைபெற்றது. யான் சென்று அச்சோழ ரொன்பதின்மரையும் போர்க்களத்தில் அழித்து நம் கிள்ளியை மீண்டும் பட்டத்திலிருத்தியிருக்கிறேன். இனி ஒரு துன்பமும் அவனை அணுகா. நாடும் அமைதியாகவே காணப்படுகிறது.

(அதுகாலை புலவர் பரணர் உள்ளே நுழைகின்றார். இருவரும் எழுந்து வணங்குகிறார்கள்.)

சேரன் செங்குட்டுவன்:—(வணங்கி) புலவர் பெரும ! தங்கள் வரவால் என் உள்ளக் கமலம் விரிந்து காணப்படுகிறது. கடந்த இருநாட்களாக இவண் வராதது எனக்கு மிக்க துன்பமாயிருந்தது. ஆனால் இத்தருணம் யான் பெரு

மகிழ்வு எய்துகிறேன். யாவும் தங்கள் திருவருளின் பயனே!

பரணர்:—வெற்றியே ஆரமாகக் கொண்ட வீர! வாழ்கநின் கொற்றம்! நின் ஆணை யாண்டும் பரவுக! நின்னை யொத் தவரது பெருமை என்னுற் கூறப்போமோ! ஆண்டில் இளையவனே யாயினும் ஆண்மையில் காளைபோன்ற நின் புகழ் எங்கும் நிலவுக. நினது அறிவு திருவாற்றல்களைச் செப்புவதற்கு நான் அத்துணை ஆற்றலுடையே னல்லேன். எனினும் ஒருவாறு எண்ணெடுத்துக் கூறிப் பாராட்டாம லிருக்க முடியவில்லை. புரவல! நின்தாயைக் கங்கை நீராட் டச் சென்றபோது வடமன்னர் பலர் நின்னுடன் பொருதார். ஆனால் நீ அதற்கஞ்சாது தனியாக நின்று அவரைத் தோற்கடித்து வெற்றிக் கொடியை நாட்டவில் லையா! கொங்கர் செங்களத்தே வந்து பொருத சோழ பாண்டிய மன்னரது கொடி படை யாவற்றையுங் கவர்ந்து கொடுகூர் நாட்டை யழிக்கவில்லையா! மேலும், கடலை அரணாகக்கொண்டு இடுக்கண் விளைவித்த பகைமன்னரை நின் உரங்கொள் மரக்கலஞ் செலுத்தித் திறலுடன் வாகை சூடவில்லையா? மன்னவ! சிறந்த நட்பினன் அறுகையென் பவன் பொருட்டு, அவனுக்குப் பகைமன்னனாய பழைய னென்னும் மோகூர் அரசனுடன் பொருது, அவன் காவன் மரமாகிய வேம்பினைத் துண்டந் துண்டமாக வெட்டி, அம்மன்னன் யானைகளையே கடாவாகவும், அவன் மகளிரது வார்குழலைக் கயிறாகவும் ஆக்கி வண்டியி லிட்டுக் கொணர்ந்த நின் அருஞ்செயலை எம்மால் என்றும் மறக்க முடியுமா? நின் மைத்துன வளவன் கிள்ளியோடு சமர்புரிந்த சோழர் ஒன்பதின்மரையும் ஒரு பகலொ ழித்த நின் திறலைப் போற்றாத புலவரும் உண்டுகொல்! எம் அன்புடைக் குன்றே! நின் மறனையும் அறனையும் வாழ்த்துவ தெனின், அஃது என்னால் உரைக்குந் தரத்த தன்று. மன்னவ, நீ நெடிது வாழ்க!

சேரன் செங்குட்டுவன்:—புலவர் கோமானே! நும் வாழ்த்து எனக்கு என்றும் உரித்தாகுக. பரணர் பெரும! யான் கொண்ட மனத்தளர்ச்சியை அவ்வப்போது களைந் தெறிந்து வந்தது தங்கள் நிறையுணர்ச்சிப் பாடலல்லவா! உளத்தைக் கனியச் செய்யும் அழகிய தங்கள் தமிழ்ப் பாடல்களின் செவ்வியை யுன்னி யுன்னி என்னெஞ் சம் மூழ்குகிறது ஆழ்ந்த களிப்பில். தெய்வப்புலவீர்!

மலரின் மணத்தை அதைச் சூடி மகிழும் மக்களன்றி ஏனையோர் நுகர்வரோ? ஆடையின் சிறப்பை அதை அணிபவரே யன்றி மற்றையோர் அறிவரோ? அது போல, தமிழ்ப் பாடல்களின் தனிப் பெருஞ்சுவையை அவைகளைப் பயில்வோரன்றி பிறிதொருவர் அறியமாட்டாரென்பது உண்மை. புலவர் பெரும! இதுகாறும் தாங்கள் எனக்கு ஆற்றிவந்த உதவிக்கு யான் கைம்மாறு செய்யாவிடின் செய்ந்நன்றி கொன்ற கொடுமைக் காளாவேன். ஆகையால் தங்கட்குப் பரிசாக இக்குரிசிலைக் கொள்க. மேலும் எனக்குள்ள நாட்டின் ஒரு பகுதியாகிய உம்பர் காட்டின் வருவாயைத் தருவித்து வாழ்க. இதுவே யான் தங்கட்குச் செய்யக்கூடிய உதவியாகும்.

பரணர்:—(குட்டுவன் சேரலைத் தன தருகழைத்து) வரையாது சுரக்கும் வள்ளியோய்! புலவர்களைக் காக்கும் செந்தமிழ்ப் புரவல! நீவிர் அளித்த பரிசிலை யான் அன்புடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். மன்னவ! பெருங்கடல் பரந்து காணப்படினும் நீர்வேட்டோர் அந்நீரை உண்ணார். ஏனெனில் அக்கடல் நீர் உவர்ப்புத் தன்மையைப் பெற்றிருக்கிறது. ஆனால் ஒரு சிறு குளத்து நீரை மக்களனைவரும் பருகுகின்றனர். ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச் சேற்றொடு பட்டிருப்பினும் அக்குளத்து நீர் இன்சுவையா யிருப்பதால் யாவரும் விரும்புகின்றனர். ஆகவே புலவர்களாய யாங்களும் வள்ளன்மை யில்லாப் பெருநிதிக் கிழவர்பால் ஒருபோதும் செல்வோமல்லேம். ஆகையால் யாவுமறிந்த மன்ன! நின்பால் வந்தடைந்த எனக்கு இப்பரிசில் கிட்டியது பெரு மகிழ்வைத் தருகின்றது. நின் கருத்துப்படியே இக்குட்டுவஞ் சேரலுக்குப் பல கல்விச் சுவை யூட்டி, அறிவாற்றல்களில் சிறந்தவனாக்கி மீண்டும் நின்னிடம் யான் கொணர்வன். அருங்குண வுருவே! நீ நீடித்து வாழ்க; யான் சென்று வருகிறேன்.

(செங்குட்டுவனும், இளங்கோவேண்மாளும் வணங்க, புலவர் குட்டுவஞ் சேரலுடன் செல்கின்றார்.)

(தொடரும்)

இலக்கியமும் வரலாறும் *

[வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி]

இலக்கியம் என்பது செய்யுள் வடிவமாக எழுதப்படுதல், இக்காலத்தில் மிகவும் குறைவுபட்டு விட்டது. செய்யுள் வடிவமாகவே முதன்முதல் இலக்கியங்கள் எல்லா மொழிகளிலும் எழுதப்பட்டன; வரலாறெனப்படுவதும் செய்யுள் வடிவத்திலேயே வரையப்பட்டது; ஆனால், அது உண்மையான வரலாற்றை, வரலாற்று முறையில் வைத்து ஆய்வு முறையுடன் கூறவில்லை. இவற்றிற்கெல்லாம் மாறாக, இக்காலத்தில் இலக்கியம் பெரும்பாலும் உரைநடை வடிவத்தில் வெளிவருகிறது; வரலாறோ வெனில், அடியோடு உரைநடைதான்; ஆனால் உண்மை யுரைப்பது. இவ் விரண்டையும் பழங்காலத்தில் எழுதிய ஆசிரியர்களின் உளப்பாங்கிற்கும், தற்காலத்தினர் உளப்பாங்கிற்கும் மிக்க வேறுபாடுகள் உண்டு. அவற்றைத் தெளிவுபட உணருமுன், அவற்றின் உண்மைக் கோட்பாடுகளைக்கூறி விடுதல் மிகையாகாது.

இலக்கிய மென்றால் என்ன? வரலாறென்பது யாது? இலக்கியம் வரலாற்றின் ஒரு பகுதியை அல்லது ஒரு பொருளின் பண்பினைப் புலவன் தன் நுண்ணறிவு, கற்பனைத் திறம் முதலியவற்றின் துணைகொண்டு உலகோர் வியப்பத் தன் உளஞ்சென்றவாறெல்லாம் சொற்கோவைபடச் சித்திரித்து எழுதுவது. வரலாறென்பது, அங்ஙனமன்றி, ஒரு நாட்டின் அல்லது அந்நாட்டிலுள்ள யாதானும் ஒரு பொருளின், அல்லது பிறவற்றின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றைக் காலம் பிறழாமல் வரிசைப்படுத்தி உள்ளதை உள்ளவாறு கூறுவது. சுருங்கக் கூறின், ஒரு பொருளையும், அதன் தொழிலையும் ஒரு புலவன் தன் அறிவுக் கெட்டியமட்டில் சித்திரித்துக் கூறுவது இலக்கியம்; ஒரு பொருளின் தொழிலை, உண்மையான அதன் நிகழ்ச்சிமுறை மாறுபடாமல், ஓர் ஆசிரியன் ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுத்தும் விரித்தும் கூறுவது வரலாறு. அதாவது வரலாறு ஒரு கண்ணாடி; இலக்கியம் ஒரு உருப்பெருக்கிக் கண்ணாடி. எடுத்துக் காட்டாகப் "பாண்டியன் நெடுஞ்செழியனோடு சேரமன்னனும், சோழவேந்தனும் தலையானங்கானம் என்றவிடத்தில் கி. பி. முதல் நூற்றாண்டில் போர் தொடுத்தனர்" என்பது வரலாறு. போர்க்களத்தில் பகையரசர் இரு

* இது குடந்தை அரசியலார் கல்லூரியில், 3-2-39-ல் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு,

வர்க்கும் கண் சிவந்ததும், மீசை துடித்ததும், யானை, தேர், குதிரைகளின் நிலைமையும், இறந்தார்க்காக இரக்கமும், வாகை யுற்றவர் மகிழ்ச்சியும், போர்க்களத் தோற்றமும், இவற்றால் அறியப்படும் அறநெறிகளும், இடையிடையே புலவன் கருத்துக்களும், இயற்கையோடு அவற்றுக்குள்ள தொடர்புகளும் பிறவும் அறிஞர் உவப்ப, மற்றவர் வியக்குமாறு புலவன் தன் கருத்துக் கேற்பக் கற்பித்துக் கூறுவது இலக்கியம். எனவே, வரலாற் றாசிரியனுக்கு, ஆராய்ந்து ஒரு பொருள் நிகழ்ச்சியின் உண்மையைக் காணும் அறிவு வேண்டப்படும்: இலக்கிய ஆசிரியன் கற்பனை யறிவுடன், நிகழ்ச்சிகளை யெல்லாம் இயற்கையுடன் இணைத்துக் காட்டும் அறிவையும் பெறவேண்டியவன் ஆகின்றான். ஆசிரியற்கேற்ப வேறுபடுவது இலக்கியம்; அங்ஙனமல்லது வரலாறு.

இனி, வரலாற்றை எழுதத் தொடங்கும் ஒருவன் அதற்கு வேண்டிய செய்திகளை உண்மையாக நிகழ்ந்தனவா என்று ஆய்தல் வேண்டும். இலக்கிய ஆசிரியன் உண்மையாக நடந்த செய்திகளையே எழுதவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை.

வரலாற்றை எழுதத் தொடங்குபவன், செய்திகளை உண்மைக்கு மாறுபடாமல் தொகுத்தும், விரித்தும் கூறல்வேண்டும். ஆனால், இலக்கியப் புலவன் உண்மை நிகழ்ச்சிக்கு மாறாகக் கதையைக் கற்பித்துப், குறைத்தும், பெருக்கியும் கூறக்கூடும்.

பத்துப் பக்கங்களுள் அடங்கக்கூடிய ஒரு வரலாற்றை அதன் ஆசிரியன் எவ்வளவுதான் பெருக்கி வரைந்தாலும் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்து உண்மைக்கு மாறாக எழுத முடியாது. ஆனால், இலக்கியம் எழுதுவோன் பத்துப் பக்கத்துச் செய்தியைத் தன் கற்பனைத் திறமைக் கேற்ப உண்மை நிகழ்வுக்கு மாறாகவும் எவ்வளவு வேண்டினும் பெருக்கி வரைய உரிமை யுடையவன். ஒரு போர் இன்னாரோடு இன்னார்க்கு இன்ன காரணங்களால் இன்ன காலத்தில் இன்ன விடத்தில் நடந்து, இன்னமுடிவை அடைந்தது என்று கூறாமல், வரலாற்றில் வரும் ஒவ்வொரு போரையும் பரணியாகப் பாடத் தொடங்கினால் வரலாற்றின் முடிவு எவ்விடத்தில்போய் முடிவுறும்! ஒரு போரைப்பற்றி இங்ஙனம் கூறினால், ஏனை அரசியல் நிலை, மக்கள் நிலை, இவற்றின் கூறுகள் முதலியவற்றைக் கற்பனை செய்யின் அவற்றைப் படிப்பவன் நிலைமை என்னாகும்! இலக்கியங்களையும், வரலாற்றையும் பிரித்துணர்ந்து படிப்பதே ஒரு பெரும் போராய்விடக் கூடும்!

எனவே, வரலாற்றை எழுதும் ஆசிரியன், தான் வரையும் வரலாற்றிற்கான சான்றுகளையெல்லாம் முதலிற்றிரட்டி அவற்றுள் அவ் வரலாற்றுக் கிசைந்த செய்திகளை மட்டில் தன் அறிவுத் துணைகொண்டு பிரித்தறிய முயலுகின்றான். இலக்கியம் எழுதுவோன், உலகத்து உயிர்கள், ஏனைப் பொருள்கள் முதலியவற்றின் நிகழ்ச்சிகளைப் பகுத்துணர்ந்து அவற்றிற்கும் இயற்கைக்கும் உள்ள இயைபுகளையெல்லாம் தன் கற்பனையறிவு மூலம் உலகமக்களுக்கு உணர்த்துகின்றான்.

இலக்கியத்தில் வரும் தலைவர்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றின் தொகையைக் காட்டிலும், வரலாற்றில் வருவனவற்றின் தொகை மிகுதியுடைத்தாகும்.

வரலாறு அஃது எழுதப்பட்ட நாட்டின் நிகழ்வு முறைகளை ஒருவன் உளத்தில் நேர்முகமாகச் சென்று செலுத்துகிறது; இலக்கியம் அங்ஙனமன்றி மறைமுகமாகவே உள்ளத்திற் பதிகிறது.

ஓரளவு கற்றவர்கள் வரலாற்றை நன்கு உணரக் கூடும்; ஆனால் இலக்கியக் கல்வி அங்ஙனமன்று. வரலாற்றில் இலக்கியம் கட்டாயம் ஒரு பகுதியாய் அடங்குதல் வேண்டும்; ஆனால் இலக்கியத்தில் வரலாறு இடம்பெறவேண்டும் என்னும் வரையறை இல்லை.

வரலாற்றை எழுதுதற்கான உண்மைக் கருவிகளைக் காண அதன் ஆசிரியன் பல்வேறு துறையிலும் அல்லற்படவேண்டியவனாகிறான். இலக்கியப் புலவன் உலக நிகழ்வுகளை உய்த்தறிய வேண்டியவனாகின்றான். வரலாற்றைக் கற்பவன் பலபேராறுகள் வந்து பாயும் கடல்போல, எச்செய்திகளையும்வாங்கிக் கொள்ளும் ஆற்றலும், அவற்றை மறவாது உண்மைகாணும் திறனும் படைத்தவனாதல் வேண்டும். ஆனால், இலக்கியங் கற்பவன், தன் ஆழ்ந்த அறிவையும், உய்த்துணரும் திறனையும் பயன்படுத்த வேண்டியவனாகின்றான்.

ஆகவே வரலாறு உள்ளதை உள்ளவாறு கூறும் இயற்கை நூல் என்பதும், இலக்கியம் அங்ஙனமல்லாத செயற்கை நூல் என்பதும் தெளிவாகின்றன.

இத்துணை வேற்றுமையுடைய இவ் விருவகை நூல்களும் தமிழிலும் தமிழ்நாட்டிலும் உள்ள நிலையைநோக்கின் ஒன்றற்கொன்று ஒற்றுமையுடையனவாய்க் காணப்படுகின்றன. அதனை யறியுமுன் பொதுமையில் இரண்டிற்குமுள்ள ஒற்றுமைகளைப் பேசுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

வரலாறு என்பது பொதுவாக ஒரு நாட்டின் நெடுநாட்பட்ட நிகழ்ச்சிகளை வரிசை முறையால் கூறும் நூல்; அஃதே போல் இலக்கியம் என்பது ஒரு நல்லாசிரியனால் பல திறச் செய்திகளையும் கற்பித்து அறிவு நுணுக்கமாகச் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பக் கூறுவது.

இனி, தனித்தனி ஒவ்வொரு பொருளையும் பற்றிய வரலாறுகள் பற்பல உண்டு; அஃதாவது, ஒரு மனிதன், அல்லது, ஒரு விலங்கு, அல்லது ஏனை யாதானும் ஒரு பொருள் என்ற இவைபற்றியும் வரலாறு எழுதல் உண்டு. இலக்கியமும் தொடர்ச்சியாக ஒரு கதையை மட்டில் கூறுமல், யாதானும் ஓர் உண்மையை உணர்த்தவும், அல்லது ஓர் உயிரின் தன்மையை விளக்கவும், அல்லது ஒரே ஒரு தனிப்பொருளைக் குறித்தும் பலதிறத்தான் எழுதப்படுதல் உண்டு.

இலக்கியமும், வரலாறும் யாதானும் ஒரு காலத்தின் நிலைமையைத் தெள்ளத் தெளிய விளக்கிக்காட்டும் ஒரு கண்ணுடி என்று தொடக்கத்திலேயே கூறப்பட்டது அதுமட்டுமன்றி, அவ்விரண்டும் அவ்வக்கால நிகழ்வுகளின்பின் நிலை நிறுத்தப்பட்ட உருவச் சிலைகள்—அல்லது—நினைவுக் குறிகள் என்று கூறுவதும் மிகையாகா.

இலக்கியத்தில் அழுகை, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம் முதலிய சுவைகளை நன்கு சுவைப்பதுபோல் வரலாற்றிலும் அவற்றையெல்லாம் ஏதும் தடையின்றிப் பெறமுடியும். இவ்விரண்டையும் கற்போன் தன்னுட்டின் முக்கால நிகழ்ச்சிகளையும் தெளிய உணர்வதோடு தாய்நாட்டன்பு மிகப் பெறுகிறுன். இவை கருவியாக, நாட்டின் குறைபாடுகளையும், அவற்றைப் போக்கி அதனை நன்னெறிச் செலுத்தும் நல்லறிவையும், அக்காலையில் இடையில் ஏற்படும் இன்னல்களை நீக்குதற்கேற்ற திட்டங்களையும், இன்னது செய்யின் இன்னது விளையும், இன்ன செய்தியால் இன்னுர் இன்ன பயன் உற்றனர் என்ற உய்த்துணர்வும் முதலான பல்வேறு அறிவுத் துறைகளில் தலைசிறந்தவனுகின்றுன். வரலாறு வெறுங் கோழைகளுக்காக இல்லை; இலக்கியம் சோம்பேறிகளுக் கென்று எழுதப்படவில்லை. இவற்றை யுணர்ந்து தம் இயற்கையறிவும், செயற்கையறிவும் ஒன்றேடொன்று பிணைந்து நின்று வேலை செய்யுமாறு ஒவ்வொருவரும் நன்கு பயிலுதல் வேண்டும்.

(தொடரும்)

௧. நூல்களின் தோற்றம்

[இளவழகனார்]

உடம்பின் வளர்ச்சிக்குங் கிளர்ச்சிக்கும் அவ்வப்போதும் உணவுதேவையானாற்போல, உணர்வின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அவ்வப்போதும் சான்றோர் அறிவுநூல்கள் இன்றியமையாதனவா யிருக்கின்றன. சிறந்த பொருட் கருக்கள் நிரம்பிய மாறுபாடில்லாத உணவினால், உடம்பு, செழுமையும் திருத்தமும் நிறமும் பளபளப்பும் பிற பயன்களும் பெறுதல் போல, உயர்ந்த நுண்பொருள்கள் நிரம்பிய இயல்பு வழுவாத நூல்களால் உணர்வு வளமும் தெளிவும் உயர்வும் ஒளியும் பிற பயன்களும் பெறுகின்றது.

உணவு இல்லாமல் உடம்புக்கு இச்செழுமை முதலான நலங்களும் இல்லை; முடிவில் அவ்வுடம்பு நிலைபெறுதலுமில்லை; பையப் பையக் கரைந்து மாய்ந்து போதலையே காண்கின்றோம். அதுபோலவே சான்றோர் அறிவு நூல்களில்லாமல் மக்களுணர்வுக்கும் இவ்வளம் முதலான நலங்களுமில்லை; முடிவில் அவ்வுணர்வு நிலைபெறுதலுமில்லை; மெல்ல மெல்லத் தேய்ந்து மழுங்கிப்போதலையே காண்கின்றோம்.

ஆனால், மக்கள் வாழ்க்கையோ வெறும் உடம்போம்புதலில்மட்டும் இல்லை. நல்ல உணவுகள் தந்து உடம்பை நலப்படுத்திக்கொள்ளுதல்போல நல்ல கருத்துகளை ஊட்டி உணர்வையும் இன்புறுத்திக் கொள்ளுங் கட்டாயத்திலேயே இருக்கின்றது. கல்வி கேள்விகளில் தினைத்தனையும் எண்ணமில்லாமல் உழைப்பது உண்பது உறங்குவது என்பதே நினைவாயிருந்து உழலும் எளிய பொதுமக்களுங்கூடச் சில வேளைகளில் தம் உணர்வை இன்புறுத்திக்கொள்ளக் கருதி யாரேனுந் தமக்கொத்த நண்பர் சிலரை நாடி அவரோடு அளவளாவி இன்புறுதலைக் காண்கிறோம். அவர்கள் திண்ணைகளிலோ பொதுவிடங்களிலோ சாலைகளிலோ கூடியமர்ந்து வெற்றுப் பேச்சுகளேனும் பேசிப் புன்மகிழ்வு கொள்கின்றனர். அன்றித் தாயம் சொக்கட்டான் முதலான எத்தனையோ வகையான களியாட்டுகளில் ஈடுபட்டுத் தம் உணர்வுக்கு ஒரு கிளர்ச்சி தேட முற்படுகின்றனர்: அல்லது கடைகட்கோ திருவிழாக்களுக்கோ சென்று புதுப்பண்டங்களையும் பொதுநிகழ்ச்சிகளையுங் கண்டேனும் உள்ளக்கிளர்ச்சி யடைகின்றனர். இங்ஙனமெல்லாம் உடம்புக்கு உணவுதேடி இடுவதுபோல, இவ்வெளிய பொதுமக்களுந் தம் உணர்வுக்கும் ஏதானும் இன்பக்கிளர்ச்சிகள் தேடி இட்டு, அவ்வப்போதுந் தளர்ந்துவிடுகின்ற தமது

உணர்வை எவ்வகையாலோ எழுச்சிபெறச் செய்துகொள்ளுதல் உலகவாழ்க்கையில் இயற்கையாயிருக்கின்றதன்றே!

இங்ஙனம் 'உடம்போம்புதல்' 'உணர்வோம்புதல்' என்னும் இவ்வாழ்க்கையின் கட்டாயங்கள் இரண்டிலும் எல்லா மக்கட்குமே எண்ணமிருந்தாலும் அவருட் பெரும்பாலாரான ஒருசாரார், உடம்போம்புதலையே முதன்மையாகக் கொண்டு உயிர்வாழ்கின்றார். மற்றொரு சாரார், உணர்வோம்புதலுக்கே முதன்மைதந்து உயிர்வாழ்கின்றார். இதனால் உலக இயற்கை இருவகையாகப் பிரிந்து வேறுபாடு தோன்ற நடைபெற்றுச் செல்கின்றது. உடம்போம்புதலையே முதன்மையாகக் கொள்வோர் பொருள் தேடுதலிலேயே எண்ணமுள்ளவராயிருக்கின்றார். உணர்வோம்புதலையே முதன்மையாகக் கொள்வோர் உள்ளந் தெளிவுபெறுதலிலேயே கருத்துடையவராயிருக்கின்றார். உலகவாழ்க்கையின் எல்லாத்துறைகளையும் விடாமல் இனிது விளக்கிச் செல்லும் ஆசிரியர் திருவள்ளுவர், முதன்மையான இவ் வேறுபாட்டு நடைமுறையையுந் தமது அழியாப் பெருமை வாய்ந்த பொய்யாப் பெருமொழியில்,

> "இருவேறு உலகத் தியற்கை திருவேறு,
> தெள்ளிய ராதலும் வேறு"

எனப் பிழிவாய் இறுத்துத் தெளிய விளக்கியருளுகின்றார்.

இனி, உடம்போம்புதலையே முதன்மையாகக் கருதி வாழ்நாள் செலுத்துவோர் தம் உணர்வை இன்புறுத்திக்கொள்வதிற் கருத்தும் முயற்சியும் இல்லாதவரல்லரென்பது மேலே காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் அவரதனைச் சிறப்பாகச் செய்துகொள்ளும் வழிவாயில்கள் அறியாதவராயிருக்கின்றார்; அதற்குக் காரணம் அவர்கள் உணர்வோம்புதலை முதன்மையாகக் கொள்ளாமையேயாம். இங்ஙனங் கொள்ளாமையால் அவர்கள் உடம்போம்புதலிலும் வழுவிவிடுகின்றார். ஏனென்றால், உணர்வு நலம் மிகப்பெற்றவர்க்கே தக்கவாறு உடம்போம்புதலுங் கூடும். அக நிலைகட்கேற்பவே ஏனைப் புறநிலைகள் அமைவது இயற்கை; புறநிலைகட்கேற்ப அகநிலைகள் அமையுமென்பது அத்துணை வன்மையுள்ள தன்று. இதுவே அவர்பாற் காணப்படுங் குறை. இக் குறைபாட்டை நீக்கி அவரையும் படிப்படியாக உணர்வுநலத்தில் மேம்படுத்துதற்கு ஏனைத் தெளிவுடையாரென்போர் பெரிதும் முயல்கின்றனர்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னுந் தெய்வத் திருமூலர் திருமொழியில் இக் கருத்து என்ன உயிர்ப்போடும் ஆற்றலோடுந் திகழ்கின்றது! இதனால் உலகத்தில்

எத்தனையோ அறிவுநூல்கள் தோன்றுதற்கு இடமாயிற்று. நூல்கள் அவரவர் தகுதிக்குந் தேவைக்குந் தக்கபடி நடையும் பொருளமைப்பும் வாய்ந்து பற்பல வகையாகத் தோன்றி யிருக்கின்றன.

அந்திப் பொழுது

மழலையந் தீஞ்சொற் குழலிசை விரைஇக்
குயிலின மாலுங் குரல்செவி மடுத்தும்;
இழுமிசை யூற்றுத் தழுவுறுஞ் சார்பில்
மரகதக் கலபம் விரிகதிர் எறிப்ப
மயினடம் புரியுஞ் செயலினைக் கண்டும்;
இளநலஞ் சான்ற தளிரெழின் மேனி
ஒசிவுற நெஞ்சில் நசைமிக வுந்தப்
பருஞ்சினை யாத்த திருந்தெழி லூசல்
உகந்தினி தாடுநர் ஊக்கங் கண்டும்;
குழல் சரிவெய்த எழிற்சிறு கைத்தலம்
செவ்வொளி பயில நவ்விநோக் கிசைந்து
பந்தடித் தாடும் பாவையர்ப் பார்த்தும்;
இரைதேர்ந் துண்டு விரைதரு புட்களும்
ஆக்களும் மாக்களும் நோக்கமை வெய்தித்
தத்தமக் கிசைவுற் றொருத்திடு மிடஞ்சேர்
நேர்மையாம் போக்கின் நீர்மையாற் களித்தும்;
புணரியி லாழ்ந்த கணவனுக் கிரங்குந்
தாமரைப் பாவையர் நோமன மமைய
ஆறுதல் கூறுந் தேறுநீர் கடுப்பப்,
பனிக்கு நீரழகு துளிக்குநற் பொய்கை
அல்லிவாய் மலர்தல் ஒல்லையிற் கண்டும்,
மாடமார்ந் துலவும் ஆடெழின் மகளிர்
கைச்சிறு மகாஅர் நச்சுறத் திரையின்
உச்சியில் எழுந்த ஒளிவளர் திங்களை
அம்புலீ! வா! என அழைத்திடல் கண்டும்;
பிணையெழி னோக்கின் றுணைகெழு மங்கையர்,
இழுமென விசைக்கு மின்னிசை பழகியும்;
பொழில்சார்ந் துலவும் எழிலிளங் குயில்கள்
குடைந்துதிர் தாதின் கொள்ளையிற் கிடந்தும்
மெல்லென மெல்லென நடந்து சொல்லரு
மையலிற் செறிந்த மக்களின், வையகம்
வந்திறுத் தனளால் அந்தியென் னணங்கே.

—சி. து. கன்னிசாமி

நெற்பயிரும் பொற்பணியும்

[திரு. வே. பா. கமலநாதன்]

ஆழி சூழிவ்வுலகில் பாழி நாடென்பது சாற்றரும் பெருமையுடைய தொன்றாகும். அது வானளாவும் மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த பல தொல் பதிகளையுடையது. தமக்கு ஒப்பில்லாத தப்பில் வளங்களுடைய நன்செய் நிலங்கள் மிக்குடையது. எங்கும் சோலைகளும் தடாகங்களும் நிறையப் பெற்றுள்ளது அந்நாட்டுப் பொழிலின் எழில்நலங் காண விஞ்சையரும் ஆசைமிஞ்சுவரெனின் நாம் வேறென்ன சொல்ல விருக்கின்றது! 'சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும்' ஆங்கே திகழ்ந்து விளங்கும். மாங்குயிலின் தீங்குரல் கேட்பார் கருத்தை ஈர்த்துக் காதுக் கினிமை நல்கும். மயிலினம் கார் கண்டு கலாபம் விரித்து ஆடுவது அழகாயிருக்கும். வரிவண்டு பண்பாடி மலரின் மதுமாந்தி மயக்குற்றுப் பறந்து திரியும். மந்திகள் மரங்களின் கிளைகளைக் கெட்டியாய்ப் பிடித்துத் தலைகீழாகத் தொங்குவதும், மரத்திற்கு மரம் தாவிக் குதிப்பதும் கண்டவர் கருத்தை யீர்க்கும். தண்டலையில் விண்டலத்தையளாவும் மூங்கில்களைக் காலலைப்பு வதா லெழும் ஓசையும், நீரோடைகள் கூழாங்கற்களின் மீது இரிந்தோடுவதால் எழும் இன்னிசையும் கலந்து கேட்பவர் காதிற்கு நல் விருந்தாயிருக்கும். கழனிகளில் கார்முகில் கண்ட சாலி செம்மாந்திருக்கும். வாவிகளில் மீனினத்தைத் தாவிப் பிடிக்கப் புள்ளினம் பறந்து திரியும்.

இன்னணம் கண்டவர் கருத்தை ஈர்க்கும் இனிய காட்சிகள் பல பெற்றுப் பாரினில் பொலிந்து தோன்றும் பாழி நாட்டின் தலைநகராம் தனியூரில் கோல் நெறிவழாத கொற்றவனும் மதியூகி யென்னும் மன்னன் வதிந்துவந்தான். தொல் குலத்துதித்த தோன்றலாமிவன் இயம்பரும் நயம் பல பெற்றுக் குடிகளின் ஐவகைத்துன்பந் துடைத்து இன்பம் நல்கி இனிது ஆண்டுவந்தான். ஒரு நாள் இவன் நகர் சோதனை செய்து வரும்போது, செய்நிலத்தொன்றினில் செஞ்சாலிக் கதிர்கள் செழிப்பாய் வளர்ந்துள்ளதைக் கண்டு களித்தான். அக்கதிர்களைத் தின்று வாட்டமின்றிக் கனத்தில் வட்டமிட்டுத் திரியும் பறவைகளைப் பார்த்து, "புள்ளினங்காள்! புவிதனைப் புரக்கும் புண்ணியப் பேறுடையேனெனினும் நான் பறவை இன்பம் பெற்றேனில்லை. உமது வாழ்வே சிறந்தது" எனச் செப்பினான். கவலையில்லாது கதிர்களைத் தின்று திரியும் புள்

ளினங்களைக் கண்டு இவ்வாறு கூறிநின்ற கொற்றவன், அயலிருந்த பழனத்துள் பளிச்சென்றொரு பொருள் பொலிந்து தோன்றக் கண்டான். அது யாதாயிருக்குமென நினைத்து, அதனை நெருங்கினன். அதற்குள் அப்பொருள் வாய்திறந்து பேசக் கண்டான். அஃதோர் பொற்பணி எனத் தெரிந்து கொண்ட நராதிபதியும் மறைவில் நின்று கேட்பானாயினன். சாலியின் தாளில் சரண்புகுதல்போலப் படிந்து விளங்கிய பொற்பணி சாலியை நோக்கி, 'நதிபதியின் அதிபதியால் நீர் பெற்று நீண்டு வளர்ந்து, அலகின் கனத்தால் தலைதாழ்த்தி நிற்கும் நெற்பயிரே! நானிலத்தில் நீ நீடு வாழ்வதில்லாமல், சின்னுள் தோன்றி யிருந்து அழிகின்றாய். அப்படி யிருந்தும் உன்னைத் தோற்றுவிப்பதில் ஞாலத்தார் சாலவும் முயற்சி கொள்கின்றனரே! அதேன்?'' எனக்கூறலும், நாட்டிற்கு நலன் செயத் தோன்றிய நெற்கதிரும், "புரைதீர் காட்சியர் வெறுக்கும் பொற்பணியே! பொன்னால் செய்யப்பட்டுள்ளதால் செருக்குற்றுச் சில மொழி பேசினாய்! பொன்னைப் பெரிதெனப் போற்றும் பேதாய்! பெரியார் அதனைப் போற்றாரென்பது அறியாய் போலும்! பொல்லாப் பொன்னைப் பெரிதும் வெறுத்தன்றோ பரமனும் அரவதனை அணியாய் அணிந்தான்! கொலை, களவு முதலியவைகட் கெல்லாம் காரணம் பொன்னன்றோ? நன்செய்ப் பயிர் விளைத்து நானிலத்தில் வாழ வகை யிருந்தும், அது செய்யாது, பொன் செய்யப் பெரிதும் விழைந்து, உள்ளதுமிழந்து ஒட்டாண்டியாவார் எத்தனைபேர்? நின் மோகத்தால் மயக்குற்று உன்னைப் பெற்றுப் பல போகம் வேட்டு நின்று அழிவார் எத்தனைபேர்? பொற்கலன் விரும்பி அணிந்த சிறுமகார் உறும் பெருநலன் ஒன்றுங் காணேன்; உன்னைச் செய்யப் பொன்னைக் கலாதன்பா லீந்து கலனும் கலாதியுமாய் மனச்சலன முறுவார் மேதினியில் எத்தனை பேருளர்? ஆட்கொல்லியாம் ஆபரணத்திற்கு நகை யெனும் பெயருண்டல்லவா? உயிருக்கே உலைவைக்கும் உன்னால் உலகத்திற்கு என்ன நன்மையுண்டு? பல்லுயிரும் பலவுலகும் பிழைப்பதற்கே பீடுடைய பிரமன் படைத்த பொருளாம் புலியதனைப் பொன்னினும் பெரிதாய்ப் போற்றுநரின் பேரெண் பேசவும் படுமோ? அதனைப் புவியிலும் போக பூமியிலும் போற்றாதவருண்டோ?'' என்றது.

அவ்வுரை கேட்ட அணியும் தணியாக் கோபமுடன், "பேதாய் நன்று கூறினை! நிலமின்றி நீ வாழாய். அந்நிலத்திடையும் தூறலின்றி வாழ வகையறியாய். நிலமகளைக் காறு கொண்டு கீறுதல் செய்து, நீர் தேக்கி ஏரினில் ஏறு பூட்டி, சேறு

செய்து, நாறு நட்டு, நீர் பாய்ச்சி, நெற்பயிர் விளைக்க வீறு கொண்டு வினையாற்றும் உழவர் உன் நலங்கருதுவதில்லையே! தமது வயிற்றுக்குச் சோறுபெறும் பேறுபெறவே யல்லவா? பொன்னைப் பழிப்பார் புவியிலுமுண்டோ? மால் மனைவியின் பெயர் பொன்னியல்லவா? அவளைப் போற்றாதவருமுண்டோ? மன்னர் நால்வகைப் படையும் சால்புற நடப்பது மாதங்கத் தாலன்றோ? மா தங்கத்தால் மாண்புற எதுதான் நடவாது? மேதினியில் மேன்மையுறுவார் பொன்படைத்தவரன்றோ? பணமில்லாதார் பிணமெனப்படுவாரன்றோ? அழகிய அணிகளை நனிவிரும்பாத வஞ்சியரும் வையத்துளரோ? மடவரலையும் மணாளனையும் இணைவிப்பது பொற்றாலியல்லவா? "முனிவரு மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியு"மென்பது முதுமொழியன்றோ? பொன்னின் பெயரையும் பொற்பணி பெயரையும் பெரிதும் போற்றிப் பாரதனில் பெண்கள் தமக்குற்ற பெயராக வைக்கும் வழக்குண்டல்லவா? திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின்தேவியும் சிலம்பு, கைவளை, பொற்றொடி முதலிய பூணணி பூண்டுளதுபற்றிப் புராணங்கள் பேசுகின்றன வல்லவா? சொற்ப காலம் பொற்புடன் விளங்கி முதிர்ந்த போது உதிர்ந்து போகும் நீயா என்னை அற்பமாய்ப் பேசுவது? மதியாது பேசிய உன் மதியீனம் இருந்தவாறென்னே!" எனப் பேசியது.

நெற்கதிர் அதுகேட்டு, நகையுற்று, நகையை நோக்கி 'நங்கைமார் எழில் நலத்திற்கான கலனே! நன்று நவின்றனை. பொன்னைப்போற்றிப் பேசினை. செல்வச் சிறப்பினைச் செப்பினை. பணியின் பெருமை பகர்ந்தனை. ஆனால் செல்வத்தையும் பொன்னையும், பணியையும் போற்றுநர் பெற்றியைப் பற்றிப் பேசினையில்லை. சிறியரே மதிக்கும் செல்வத்தைச் சீரியர் சிறிதும் போற்றார். பெரியார் பொன்னைப் பெரிதும் பொருட்படுத்தார். அணியை நனிவிரும்பும் நங்கைமார் மாறுபடும் உளத்தொடு வாழ்பவர். இப்படியாய் எப்படிப் பார்த்தாலும் சிற்றினத்தவரே போற்றும் பொன்னும் பணியும் பெருமையுடையதாகுமா? பொன்னைத் தின்று புவியில் உள்ளார் உயிர் வாழ்வரோ? நிலனைப்பெற்றார் நலனையுற்றார் என்பதும், ஏருடையோரே சீருடையோர் என்பதும், மேழிச் செல்வமே கோழைபடாததென்பதும், நெற்பயிரே நானிலம் புரப்பதென்பதும் நீ இன்னும் கற்கிலைபோலும்! புல்லினப்படுவதாலேயே எம்மைப் புல்லியரெனக் கொண்டாய் போலும்! உலகத்து உள்ள எறும்பி முதல் எறும்பு ஈறாக உள்ளவைகளுக்கு நாங்கள் நன்மை செய்பவரல்லவா? உழுவான் தலைக்

கடையில் ஒதுவானெல்லாம் இருக்கும் தன்மை நீ அறியாயோ? மெல்லியர் மேல் மிளிரும் மேலான கலனெல்லாம் அவர் அன்ன மது காணுது கலுழ்ந்து நிற்குங்கால் என்ன நலனைச் செய்யக் கூடும்? கற்கோட்டையும் காவலரும் நிலைத்து நிற்பது நெற் கோட்டை சீருற இருப்பதாலன்றோ? எவ்வாசை விட்டவரும் எமதாசை நீக்க வல்லவராவரோ? ஐயிரண்டு திங்களாய் அங்க மெலாம் நொந்துபெற்ற அன்னையையும், அறியாமை அகற்றி அறிவுக்கண் திறந்த தந்தையையும் ஒருவர் மறக்கலாம். என்னை மறந்து ஒருவர் ஒரு நாளும் வாழக்கூடுமோ? வாழ் வும் தாழ்வும் எம்மைப் பொருந்தியுளதல்லவா? நெற்பயிர் இல்லையானல் பற்பல உயிர்கள் ஒழியுமன்றோ? பரமன் ஈந்த இருநாழி நெல் பெற்றே எமதன்னையாம் மலைமகளும் உளமார் காஞ்சியில் முப்பத்திரண்டு அறம் வளர்த்தாளன்றோ? கற்பு டைப் பெண்டிர்போல் பொற்புடை நெற்கதிர் தலைதாழ்த்திக் கால்நோக்கி நிற்கும் நீர்மையால் அதன் பெருமை விளங்க வில்லையா? பண்டைக்காலத்துப் பெண்மணிகள் நெற்கதிர் சூடி நின்றுரென நூல்கள் நுவலுகின்றனவே? இல்லங்களின் வெளிப்புறச் சுவரில் நெற்கதிர் தீட்டப்பட்டிருக்குமாம். நெல் லையும் முல்லையையும் தூவி இல்லுறை தெய்வங்களைப் பண்டை யோர் போற்றவில்லையா? பாணர்கள் பெரிதும் விரும்பிய கள்ளானது நெல்லினின்றும் தான் செய்யப்படுமாம். நெற் கதிரால் வேயப்பட்ட வீட்டினில் எங்கும் பொற்குவியலென்ன நெற்குவியல்களிருக்குமாம். உலர்த்தும் நெல்லைக் கோழி கொத்தித் தின்னக்கண்டால் காவற்பெண்கள் தங்கள் காதி லுள்ள குழைகளைக் கழற்றி வீசி எறிந்து அவைகளைத் துரத்து வார்களாம். நெல்லைக்கொடுத்தே வேறு பல்பொருள்களும் பெறுவார்கள். கலைமகளின் உருவாம் ஔவையாரும் 'நெற் பயிர் விளை' என்றல்லவோ கூறியிருக்கின்றுள்; 'பொற்பணி பூண்' எனப் புகலவில்லையே. நில உண்டையை உண்டு பண்ணிய பிரமனது கபாலங் கையிற் கொண்டு பிச்சை ஏற்ற பரமனும், உலக உண்டையை உண்ட பெருவாயனும் பெருமா னும் எம்மை உகந்து போற்றவில்லையா? குலோத்துங்க சோழனுக்கு மகுடாபிஷேகமானபோது ஔவையார் 'வரப் புயர' என முக்கால் வாழ்த்தி, 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும் கோலுயரக் கோனுயர்வான்' என விளக்கி நெல்லால் மன்ன னது மாட்சி ஏற்படும் எனக் கூறினளல்லவா? நெல்லின் திரிபாம் அரிசியே அகிலம் காக்கும் கடவுளெனவும் கூறலாம். அன்னம் பிராணமயம்; 'அன்னத்தாலாய வுடம்பின் பயனெல் லாம் முன்னவனைக் காட்டிவிடு' மல்லவா? அமரரும்

அன்னத்தை ஆகுதியில் பெறுகின்றனரே! புவியில் பொன் பெற்றார் பொழுது புலருமுன் பெற்றபொருளை மறப்பார்; அன்னமிட்டவரை ஆயுள்வரை மறவாதிருப்பரே! செஞ் சோற்றுக் கடன்கழிய வெம்போரிலிருந்து வீரர் உயிர்விடவும் முந்துவரே! புரவலர் பொன்முடி சூட்டும் பெருமை நென்முடி நடும் வேளாளருக் கன்றோ வாய்த்துளது; பொன்னுடைய வருக்கல்லவே! சொற்பதங்கடந்த தற்பரனும் வையையின் உடைப்பை அடைக்க ஆளாய் நின்று பிட்டுப்பெற விழைந்தா னல்லவா? "வேலிதரும் கூலிபெற்றுப் போகுமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" எனப்பாடி, சுவர் விழாமல் செய்து நெல்லைக் கூலியாகக் கம்பன் பெற்றானே! அரிசி என்னுஞ் சொல்லை ஆராய்ந்து பார்க்கின், அரி என்பது விண்டுவாகிய சக்தியை யும் சி என்பது சிவத்தையும் குறிப்பது புலனாகுமல்லவா? சத்தியாய்ச் சிவமயமாய் நிற்கும் தற்பரன் உலகினை ஓம்புதல் போல அரிசியும் அகிலத்தைக் காக்கின்றதல்லவா? பொன் பெற்றும் உணவு அற்றார் உயிரற்றாரா வரன்றோ? 'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா, இல்லைத்தான் பசியாயிருக்கத்தான் பதுமத்தான் எழுதினானா, பல்லைத்தான் விரித்திரந்தால் நெல்லைத்தான் வரகைத்தான் பரிந்தாரீவார், முல்லைத் தாண்டவராய கங்கைகுலம் விளங்க வந்த முதன்மையோனே' எனப் பசியால் நலிவுற்ற பாவல ரொருவர் பாடியுள்ளதையேனும் கேட்டதில்லையா? தொட்டி முதல் தொண்டைமான் வரை எண்ணும் கருமமெலாம் உண் ணுங் கருமமல்லால் பிறிதொன்றாமோ? மணவினைக் காலத்து நிறைநாழி வைத்துப் போற்றுவதும், பிணச்சடங்கு களில் நிறைநாழி வைப்பதும் நீணிலத்தில் வழக்கன்றோ? தன லக்ஷ்மியினும் தானிய லக்ஷ்மி சிறந்தவள் எனச் சீரியர் சொல் வதும் அறியாயா? விரிவஞ்சி இதோடு நிறுத்துகின்றேன்.' என நெற்கதிர் கூறியது.

மறைவில் நின்ற மன்னன் தன்னை நெருங்குவது கண்ட பொற்பணி பேசாதிருந்தது. நகையை நராதிபதி கையிலெ டுத்துப் பார்த்து அது ஒரு கழுத்தணியாயிருக்கக்கண்டு, அதனைத் தன் அரண்மனைக்குக் கொண்டு சென்றான். பொற் பணியும் நெற்கதிரும் பேசியதெல்லாம் நீள நினைந்து களித்துத் தனது நாட்டில் நெற்பயிர் நன்றாய் விளையவேண்டிய வகையில் உழவர் உளங்கொண்டு உழைக்கச் செய்து, உரத்திற்கும் பணத்திற்கும் உழவர் துன்புறாது எளிதில் பெறும் வகை செய்து இறையையும் குறைத்து குடிமக்களது நலங்கருதி ஆட்சி செய்துவந்தான். பாழிநாடெங்கும் நெற்பயிர் நீள வளர்ந்து, மேழிச் செல்வம் சிறந்து விளங்கியது.

கலித்தொகையிலொரு கதை

[மகிழ்நன்]

(முன் ௨௭௮-ஆம் பக்கம் தொடர்ச்சி)

அழல்போற் காய்ந்த வெயிலில் நடந்த ஒப்பிலான் விண்ணை நோக்கினான். கதிரவன் விளங்கிய இடத்தன்றி வேறெங்கும் நீலமே தோன்றிற்று. இரண்டோரிடத்தில் நனி பெரிய பருத்தித் திரள்கள்போல் தொங்கிய முகிற்கூட்டங்கள் விண்ணின் குளிர்தரு நீலத்தைத் தூக்கிக்காட்டின. விசும்பின் நீலவினிமையைக் கண்களாற் பருகிய நன்மகன், "வான்நோக்கி வாழார் வாழ்வென்னே! கீழ்நோக்கி நாட்போக்கும் இழிவென்னே! இறைவற்கிடமாயமர்ந்த நீணிற மேனி அம்மையின் அழகன்றோ இது? அவள் கொழுநனின் கடுவுண்டு கறுத்த மிடற்றின் அழகன்றோ இது? எல்லோரு முய்ய நஞ்சை விழுங்கிய கழிபேரிரக்கத்தை நினைப்பூட்டும் விசும்பே! நஞ்சுபோல் எரிகின்ற வெயிலின் இன்னாமை உன்னை நோக்க ஒருவாறு தணிகின்றது." என்று குழைந்து நினைந்து அடி நீட்டி நடந்தான்.

பாலைநிலம் மறைந்தது. மறுபடியுங் குறிஞ்சி வந்தது. தினைப்புனங்கள் தோன்றின. தண்ணிழல்தரு மரங்கள் ஆங்காங்கு நின்றன. வெப்பம் நீங்கிய காற்று வீசிற்று. வெயிலுங் குறைந்தது. குருவிகள் மகிழ்ச்சியுடன் பறந்து திரிந்தன. மகளிர் புள்ளோப்புங் குரலெழுந்தது. ஒப்பிலான் நடந்த வழியின் வலது புறத்திலிருந்த குன்றின் அடிப்பகுதியிலொரு ஆலமரம் நின்றது. அதனடியிற்போய் அவன் அமர்ந்தான். அவனுக்கெதிரே அண்மையில் தினைப்புனமொன்றிருந்தது. இத்தினைப்புனம், நடுவேயோடிய வரப்பால் வகுக்கப்பட்டு இருபகுதியாய் விளங்கிற்று. புனலாடி வந்து, முழங்காலளவுந் தொங்கிய கூந்தலை விரல்களாற் சிக்கறுத்து உலர்த்திக்கொண்டு, வரப்பின் நடுவில் கட்டிளம் பெண்ணொருத்தி நின்றாள். அவளணிந்திருந்த மெல்லிய ஆடை உடலோடு நன்கு பொருந்தி, வெவ்வேறு உறுப்புக்களின் வடிவையும் இசைவையும் செவ்வனம் வெளிப்படுத்திற்று. இதுகாறும் பெண்ணுருக் கண்டு சிறிதும் கவனம் செலுத்தாத ஒப்பிலான், எழில்பெற இசைந்த உறுப்புக்கள்கொண்டு தன் முன் நின்ற உருவத்திற்கமைந்த முகத்தைக் காணப் பெரிதும் விரும்பினான். பசுமை சூழ, மஞ்சளுஞ் செம்மையுங் கலந்த சேலையணிந்து, இருள்போன்ற கூந்தல் விரிந்து விழ, ஒளிவிடு

இன்ற கலங்கள் விளங்க நின்ற அம்மங்கை, ஒப்பிலானின் உள்ளத்திலெழுந்த நினைவையறிந்து, அதற்கிடங்கொடுக்க மறுத்தவள்போல் நிலைமாற்றமின்றிக் குழலே கண்ணுயினள். சற்றிளைப்பாறிச் செல்ல வெண்ணிய நம் உயர்மகன் எதிரே நின்ற உருவத்தின் முகத்தைக்காணுது போவதில்லை என்ற உறுதியோடமர்ந்தான். இவ்வுறுதி அவனுக்குச் சிறிது நாணத்தை யுண்டாக்கிற்று. ஒருபுறமாகத் திரண்டு விழுந்த கூந்தலை நேர்மை செய்துகொண்டு, மறுபுறமாகத்தொங்குமாறு செய்வதற்குத் தன் தலையைத் திருப்பியகாலை நாணங்கலந்த ஆவலோடு ஒரு மகன் தன்னை உற்றுநோக்குவதை அந்த நங்கை கண்டாள். இத்துறையில் மெல்லியலார் அறிவு மிக நுண்ணியதாதலின், அவள், ஒப்பிலானைத் தான் பார்த்தது வெளிப்படாதவாறு மறைத்தாள்; மறைத்துச் சிறிது ஒதுங்கி நின்றாள்.

சொற்போர், விற்போர்களில் எக்காலத்தும், எத்துணையும் மயக்கமுறாத நம் நண்பன், 'நல்ல மகளிருடைய உறுப்புக்களெல்லாவற்றையும் ஒருங்குகொண்டு ஒருவடிவாகப் பண்ணப்பட்டாள்' போல் நின்ற இச்செல்வியின் விழியம்பு ஊடுருவிச்சென்ற நெஞ்சத்தனுகி உறுதியிழந்தான். திகைப்புந் தத்தளிப்பும் வந்து அவனைப் பற்றின. நிறைந்தமதி இனிய கதிர்களைவிட்டாற்போன்ற அவளது திருமுகம், அவனுடைய அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்ற நான்கையும் ஓட்டிற்று. மதிமுகங்கண்டு மதியழிந்தான் ஒப்பிலான்.

"ஒன்று மறிந்திலேன்" என நின்ற இனியள், புண்பட்ட நெஞ்சொடு புலம்பிய மகனது இன்னுயிர் ஏகிடப் பிடிபோல் அடி வைத்து நடந்து, தன்போற் பவள வாய்கொண்ட கிளிகள் புனத்தில் வந்திறங்குமிடத்தை யணுகிக் குறுநகையுடன் மெல்லிய குரலெழுப்பினுள். மதிமயங்கி, நெஞ்சழிந்து வருந்திய ஒப்பிலான், நங்கையின் இளநகையாலும், இனிய குரலாலும் மற்றும் புண்பட்டு, அடுத்து யாது செய்வதென்றறியாது விழித்தான். பெற்றோர் பெரிதும் போற்றும் நன்மகன், கற்றோர் அனைவரும் புகழும் பொன்மகன், நட்டோர் எவரும் ஏத்து மிளமகன், இப்பொழுது ஆண்மைகுன்றி, அறிவடங்கிச் சொல்லொடுங்கி நின்ற நிலையை என்னென்றெடுத்துரைப்பது! அறிவிலும் ஆற்றலிலும் அவனுக்கு ஒருசிறிதும் இணையாகாத எத்தனையோ மக்கள் இந்நிலையில் மயக்கம் எத்துணையுமின்றித் தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட மகளிரோடு பேசமுயன்றிருப்பர்; கிளியோட்டத் தாம் விரைந்திருப்பர்; "வேட்கையால் ஆவிபோகின்றது. சிறிது நீர் தருக" என்று வேண்டி

யிருப்பர் ; "பாதைவிட் டலைந்து, கடுநடை நடந்து களைத்துப் போனேன், வழிகாட்டுவீரோ? என்று இரங்கிக்கேட்டிருப்பர் ; இல்லாவிடின், "அன்னமெனை, மயிலெனை, புறவெனை, நடையுஞ் சாயலும் மடப்பமுமுடையாய், உனது அழகு கண்டவரை வருத்தும் தன்மையுடையதென்பதை நீ அறியாய் கொல் !" என்று புகழ்ந்து பேசியிருப்பர் ; அல்லது, "இனிய நகையினையும், இலங்குகின்ற எயிற்றினையும், சிவந்தவாயினையுமுடையாய், உனக்கொன்று கூறுவேன், கேள்!" என்று பேச்சுத் தொடங்கியிருப்பர். ஈண்டுக் கூறியவற்றி லொன்றேனும் அவனுக்குத் தோன்றவில்லை. இங்ஙனம் ஒப்பிலான் ஒன்றும் செய்ய வறியாது நின்றமை யாதுபற்றி வந்தது?

ஆண்மையும் இனிமையும் நிறைந்த நன்மக்கள் சிலரின் உளப்பான்மை ஒப்பிலானிடத்து விளங்குகின்றது. இத்தகைய உயர்மக்கள் மற்றவர்களின் எளிமை அல்லது துணையற்ற நிலைகண்டு தமக்கு வேண்டியதை அவரிடமிருந்து வலிமையாற் பறித்துக்கொள்ளார். உலகெலாம் ஒருங்கு பெறுவதாயினும் தவறென்று தாம் கருது மொன்றைச் செய்யார். பிறர் நெஞ்சு நோவ ஒன்று செய்வதை அல்லது சொல்வதைக் காட்டினும் தம்மையே வருத்திக்கொள்வர் ; அதனால் தாம் இறந்துபட நேரிடினும் பின்னிடையார். பந்தியிற் பிந்துவர் ; போரில் முந்துவர். இத்தன்மை வாய்ந்த ஒப்பிலான் தான் காதல் கொண்ட மங்கையை நெருங்கிப் பேசக் கூசியது வியப்பாகாது. வெவ்வேறு வகையினரான மக்கள் நானிலத்திலுளர். இது பற்றியே உலக வாழ்க்கை பல திறப்பட்டதாய்ப் புதுமையுடையதாய், இனிமை பயப்பதாய் அமைந்துளது.

ஒப்பிலான், தான் காதலித்த நங்கையின் நட்பைப்பெற முன் செல்லாதது, அவள்பால் அவன் வைத்த மதிப்பையும், பெண்ணுலகுக் கவனளித்த பெருமையையும், எல்லோரிடத்து மவனுக்கிருந்த தணிவையும் விளக்குமேயன்றி, அவனுக்குத் துணிவுங் காட்சியுமில்லையென்பதைக் காட்டுங்கொல்? இவ் வினிய தன்மை ஒப்பிலான்பால் பெருகி மிளிர்வதை மேற் சென்று பார்ப்போம்.

கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[காழி சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

திராவிட மொழிகள்

தமிழ்—II.

தமிழ் என்னுஞ் சொல்லுக்கு நேர் வடமொழிச் சொல் திராவிடம் என்பதாம். இச்சொல் தமிழர் அல்லது திராவிடர் வாழ்ந்த நாட்டையும், அவர்கள் பேசிய மொழியையும் ஒருங்கே குறிப்பதாகும். தமிழ் என்ற சொல்லின் ஒலிவடிவிற்கும் திராவிடம் என்ற சொல்லின் ஒலிவடிவிற்கு மிடையே எத்துணையோ வேறுபாடு காணப்படினும், இரண்டும் ஒரே வேரிலிருந்தே பிறந்ததாகக் கருதுவதற் கிடமுள்ளது. இக் கருத்து ஒப்புக்கொள்ளப்படின், தமிழ் என்ற சொல்லே பின்னர் திராவிடம் எனத் திரிபுற்றது என்று கூறுவதைக் காட்டிலும், திராவிடம் என்ற சொல்தான் தமிழ் என்று பின்னர்த் திரிபுற்றது என்று கூறுதல் எளிதும் நேரிதுமாம்*. இந்திய நாட்டின் தென்பகுதியில் வசிக்கும் ஒரு மக்கட் பகுதியினர் தங்களையே குறிப்பதற்குக்கூடத் தமிழ்மொழியை யொழித்து வடமொழியாகிய திராவிடம் என்ற சொல்லைக் கையாண்டிருப்பர் என்றோ, அன்றி அவர்தம் நண்பர்களான அயல்நாட்டினரும் அவர்களை அப்பெயராலேயே குறித்திருப்பர் என்றோ கொள்ளுதல் பிழைபாடுடையதாகத் தோற்றக் கூடும். தமக்கெனத் தம்மொழியிற் பெயரொன்றில்லாது பிற மொழிப் பெயரொன்றைத் தேடி அமைத்துக் கொண்டார் ஒரு மக்கட் பகுதியினர் எனின் யார்தான் முதலில் எளிதில் நம்ப ஒருப்படுவர்! ஆனால் இதுவே உண்மையென்று கருதவேண்டியதாக வுள்ளது. திராவிட நாட்டின் தென்பகுதிக்குப் பாண்டியநாடு என்ற பெயருள்ளது. அப்பெயர் வடமொழிப் பெயரே. இன்னும், சோழம். கேரளம், ஆந்திரம், கலிங்கம் என்ற எல்லாம் வடமொழிச் சொற்களாகவே தோற்றுகின்றன. **கருநாடகம்** என்ற ஒரு சொல்மட்டும் தனித்தமிழ்ச் சொல்லாகக் கொள்ளப்படும். மேற்குறித்த பெயர்களெல்லாம் வடமொழி அகராதிகளிற் காணப்படினும் அவற்றின் வேர்ப்பொருள் என்ன என்பது அவ்வகராதிகளிற் குறிக்கப்பட

* கால்டுவெல் துரைமகனாரே தங்காலத்திலிருந்த தமிழ்ப் புலவர்கள் இம்முடிபை யொப்புக் கொள்ளவில்லை என்று பின்னர்க் கூறியுள்ளார். இக்கால ஆராய்ச்சிப் புலவர்களும் இதனை ஒப்புக்கொள்ள முன்வராமை வியப்பன்று. —கா-சிவ-க.

வில்லை. இதனால் அப் பெயர்களெல்லாம் வடமொழிப் பெயர்கள்தான் என்று துணிந்து கூறுவதற்கு மியலாதிருக்கின்றது. எனவே, இவை வடமொழிப் பெயர்களாகவே தோற்றுகின்றன என்ற அளவில் இவ்வாராய்ச்சி நின்றுவிடுகிறது. இனி, ஆந்திரம் என்ற சொல் பிராமணங்கள் ஒன்றனுள் எடுத்தாளப்பட்டிருப்பதாக முன்னர்க் கூறப்பட்டது. ஆயினும், அந்தச் சொல்லின் உண்மைப் பொருள் என்ன என்பது யாண்டும் விளக்கப்படவில்லை. வேதங்களுட் காணப்படும் பல பெயர்களுக்குப் பொதுவாகவே பொருள் விளங்குவதில்லை. ஆதலால் இப் பெயர்களெல்லாம் வடமொழிக்கு முற்பட்ட ஒரு வடவிந்திய மொழியினின்று பெறப்பட்டனவோ என்று ஐயுறவேண்டியதாகவு மிருக்கின்றது. திராவிடம் என்ற சொல்லின் முதலிலுள்ள **திரா** என்ற பதத்திற்கு நேர் வடமொழி **த்ர்** என்பதாகும். இது திராவிடமொழி யியல்புக்கே அப்பாற்பட்ட ஒரு கூட்டொலியாம்.

திராவிடம் என்ற சொல் திரமிடம் என்று பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. திராவிடம் என்பது திரவிடம் எனக் குறுகி, திரவிடம் திரமிடம் என்றாயிற்று என முடிபு செய்தல் ஒருவாறு பொருந்தும். இந்த இருசொற்களும் தமிழில் வழங்குகின்றன; எனினும் திரமிடம் என்ற சொல்லே தமிழ் நிகண்டுகளில் முதலிடம் பெறுகின்றது. இனி, வராஹமிஹிரரின் **பிருஹத் சம்ஹிதை**யில் திரமிடம் என்ற சொல் திரவிடம் என்பதற்கு மாறாகப் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது என '**டாக்டர் கேர்ன்**[1] என்ற அறிஞர் கூறுகிறார். இந்தத் திரமிடம் என்பதே **திரமிளம்** என்பதாக, [2] "இந்தியாவில் புத்தமத வளர்ச்சி" என்று கி. பி. 1573-ல் **தாரநாதர்** என்பவரால் திபேத்தில் எழுதப்பட்ட ஒருநூலிற் காணப்படுகிறது. மலையாள மொழியிலுள்ள புராணங்களில் இவ்வுருவமே காணப்படுகின்றதென [3]**டாக்டர் கூண்டேர்ட்** என்பவர் குறித்துள்ளார். [4]**மகாவமிச**த்திலுள்ள "பாலி" யில் திரமிளம் என்பது **தமிளோ** என வழங்கப்பட்டுள்ளது. சிரமணம் என்ற வடசொல் சமணம் என்று திரிந்துள்ளது ஈண்டு நோக்கற்பாற்று. இத் தமிளோ என்பதே தமிழ் என்றாயிற்று என்று எளிதில் ஊகிக்கலாம்.

இனி, [5]**பியூட்டிஞ்சர் டேபில்ஸ்** என்ற பெயரால் உரோம நிலப்படங்கள் சில வழங்குகின்றன. அவற்றுள் காணப்படும்

1. Dr. Kern. 2. Taranatha's Tibetan "History of the Propogation of Buddhism in India." 3. Dr. Gundert. 4 The Pali of the Mahawanso. 5. The Peutinger Tables,

இந்தியப் பகுதி [1]ஆந்திர இந்தி என்றும் தமிரிசி என்றும் இரண்டு பெயர்களாற் குறிக்கப்பட்டுள்ளது. இவை தெலுங்கு நாட்டையும் தமிழ்நாட்டையுமே குறித்தனவாம். சில நூற்றுண்டுகட்குப் பின் வந்த [2]குமரிலபட்டா என்பவரால் ஆந்திரர்கள் என்றும் திராவிடர்கள் என்றும் தெளிவாகக் குறிக்கப்படுவது கொண்டு இது விளங்கும். தமிரிசி என்ற பகுதியில் [3]மோதுரா என்ற நகரம் ஒன்று இருந்ததாக [4]இராவென்ன என்ற நிலநூலாசிரியரொருவர் குறித்துள்ளமையால் தமிரிசி என்பது தமிழையே குறிப்பதாகும் என்பது வலியுறுத்தப் படும். இன்னும் [5]ஹியூன்-சியாங் என்னும் சீன யாத்திரிகர், ட்சி-மோ-லோ என்று குறித்துள்ளதும் தமிழ் என்ற சொல்லேயேதான்.

இதுகாறுங் கூறியவாற்றால் திராவிடம் என்பதுதான் தமிழ்எனத் திரிந்தது என்பது ஒருவாறு விளங்கும். எனினும், இதில் ஒரு வியப்பென்னவென்றால், எடுத்ததெல்லாம் வடமொழியிலிருந்துதான் பிறந்தது என்று சாதிக்க முயலும் தமிழ்ப்புலவர்கள் இந்தத் "தமிழ்" என்ற சொல்மட்டும் வடமொழியிலிருந்து பிறந்ததாகவோ, வடமொழிச் சொல்லே திரிந்ததாகவோ கொள்ள முன் வருகின்றார்களில்லை என்பதே. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்று தனிப்பட்ட ஒரு விளக்கத்தை அவர்கள் தமிழ் என்ற சொற்குக் கொடுத்து வலியுறுத்துகின்றனர். செம்மைசான்ற உயர் மொழியாகிய தமிழ்மொழியின் ஒலிச் சிறப்புநோக்கி இந்த வரையறையை ஒப்புக்கொள்ள எவரும் மறுக்கமாட்டார். ஆயினும், இதன்கண் அதன் பிறப்புண்மையும் பொதிந்து கிடக்கின்றது என்பதைமட்டும் எளிதில் ஒப்புக்கொள்வதற்கில்லை.

---

1. Andre Indi and Damirice. 2. Kumarila-bhatta. 3. Modura. 4. Ravenna. 5. Tchi-mo-lo of Hieun- Tsang.

[காழிக் கண்ணன்]

ரு. நெருப்பு! நெருப்பு!!

என் மகிழ்ச்சியான வாழ்க்கை நெடுநாள் நீடிக்கவில்லை. கிழவிக்கு ஒரு மகனிருந்தான்; அவன்தான் சிறுவன் முருகனின் தந்தை. அவன் போர்முனைக்குச் சென்றிருந்தான். அங்கிருந்து கையிற் சிறிது பொருளுடன் அவன் திரும்பி வந்தான். வந்ததும், ஒரு சிற்றூரில் சிறு வீடு ஒன்றை வாங்கிக்கொண்டு கிழவியையும் முருகனையும் அழைத்துக்கொண்டு அவ்வூருக்குக் குடிபோய்விட்டான்; போகுமுன், முருகன் எவ்வளவு கூறியுங் கேளாமல், என்னைப் பக்கத்தூரிலுள்ள வண்டிக்காரன் ஒருவனிடம் விற்றுவிட்டான்.

ஆகவே, மிகுந்த வருத்தத்துடன் அவ்வண்டிக்காரனிடம் நான் சில நாட்கள் கழிக்க வேண்டியதாயிற்று. எனக்கென்னவோ வண்டியிழுக்கிற வேலை என்றால் எப்பொழுதும் பிடிப்பதில்லை. அதை என் நிலைக்குரிய மதிப்பிற்குக் குறைந்ததென்றே நான் கருதியிருந்தேன். மனத்திற்குப் பிடிக்காத வேலையொன்றில் ஊக்கம் எங்கிருந்து பிறக்கும்? ஆகவே வேண்டா வெறுப்பாய்ச் சில நாட்கள் நான் வண்டியிழுத்தேன். பின், முரட்டுத்தனம் பண்ணத் தொடங்கினேன்; மேற்கே போகச் சொன்னால் கிழக்கே இழுப்பதும், சாலை நடுவே போகச் சொன்னால் ஓரமாகச் செல்வதுமாகச் சண்டித்தனம் செய்யலானேன். வண்டிக்காரன் மிரட்டிப் பார்த்தான்; அடித்துப் பார்த்தான்; பட்டினி போட்டும் பார்

தான். ஒன்றிலும் நான் வழிக்கு வருவதாக அவனுக்குத் தோற்றவில்லை; ஆதலால் என்னை அயலூர்ப் பண்ணைக்கார ஐயர் ஒருவரிடம் விற்றுவிட்டான்.

அந்த ஐயர் இருந்த ஊர் ஒரு நத்தம் என்றுதான் சொல்லவேண்டும். அங்கிருக்கும் வீடுகளில் அவர் வீடு ஒன்றுதான் கல்வீடு. மற்றவை யெல்லாம் குச்சு வீடுகளே. குச்சு வீட்டிலிருந்தவர்களெல்லாரும் தாழ்ந்த வகுப்பினர்களாகக் கருதப்படும் உழவுமக்கள். ஆகவே ஐயருடைய மனைவிக்கும், ஏழுவயதுள்ள அவர் பெண் ஸரஸாவிற்கும் பேச்சுத் துணைக்குக்கூடச் சரியான ஆட்கள் வேறு இல்லை. இந்நிலையில் என்னைக் கண்டதும் ஸரஸா என்னிடம் மிகுந்த பற்றுவைத்து என்னை அவளுடைய விளையாட்டுத் தோழனாகவே கருதினாள் என்று கூறவும் வேண்டுமோ! என்னை வண்டியிலோ ஏரிலோ கட்ட வேண்டாமென்று அவள் தந்தையிடம் அவளாக மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். ஐயர் அதற்கு இணங்கியது அவளுக்கு அளவுகடந்த களிப்பை யளித்தது. எனக்குத் தீனிவைக்கும் வேலையைத் தானே கவனிப்பதாக ஏற்றுக்கொண்டு வேளை தவறாமல் எனக்குத் தவிடும், புண்ணாக்கும், பருத்திக்கொட்டையும் வேண்டுமளவிற்கு அவள் அளித்து வந்தாள். வேலையுமில்லாமல், வேளைக்கு வேளை இவ்வாறு வயிறு முட்டத் தீனியுங் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

ஆனால், ஐயரின் மனைவிக்கு மட்டும் ஸரஸா என்னை இவ்வாறு கவனித்துவருவது பிடிக்கவில்லை. "எப்பொழுது பார்த்தாலும் அந்தக் காளைக்கு என்ன கேடுவந்தது? தீனிவைத்துத் திணித்தபடியே இருக்கிறாயே! வீட்டில் விளையாடிக்கொண்டிருப்பதை விட்டு மாட்டுக் கொட்டிலிலேயே காலங் கழிப்பதென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கடுகடுப்பாள். ஸரஸா இதனைப் பொருட்படுத்துவதில்லை. உறங்கும் வேளையும் உண்ணும் வேளையுந்தவிர மற்றெப்பொழுதும் என்னருகிலேயே அவள் விளையாடிக் கொண்டிருப்பாள். "இராமன்" என்று எனக்கு அவள் பெயர்வேறு வைத்திருந்தாள். ஆகவே, மாட்டுக் கொட்டிலில் அவள் "இராமா, இராமா" என்று கூப்பிடும் குரல் எப்பொழுதும் ஒலித்தபடியே இருக்கும்.

"இராமா! என் வருத்தத்தை வேறு யாரிடம் சொல்வேன்? உன்னைத்தவிர எனக்கு உற்ற துணை வேறு யார்? நீயோ மாடாதலால் உன்னாற் பேச முடியாது. பேசமுடியாத உன்னிடம் நான் விளையாடிக் கொண்டிருப்பதுகூட என்

தாயாருக்குப் பிடிக்கவில்லை. என் விதியை என்னென்று சொல்வது!" என்று ஸரஸா அடிக்கடி கண்ணீர் உகுப்பாள்.

ஆம், என்னாற் பேசமுடியாததுதான். பேசமுடியாத குறையை நான் இப்பொழுது உணர்ந்ததுபோல் வேறெப் பொழுதும் உணர்ந்ததில்லை. ஸரஸா சொன்ன ஒவ்வொரு சொல்லும் என் உள்ளத்தை உருக்கியது. அக்குழந்தைக்கு உள்ளூற வெப்பு நோய் இருந்துவருவதும், அதனால் அவள் நாளுக்கு நாள் மெலிந்துவருவதும் என் கண்களுக்குப் புலப் பட்டன; ஆனால் ஐயருக்கும் அவர் மனைவிக்கும் புலப்படவில்லை போலும்! இது வேறு என்னை வருத்தியமையால் நான் இரவும் பகலும் அக்குழந்தையின் நினைவாகவே இருந்து வரலானேன்.

ஒருநாள் இரவுமணி ஒன்றிருக்கும் "நெருப்பு! நெருப்பு!!" என்று கூக்குரல் கேட்டது. ஐயர் வீடு நெருப்புப் பிடித்துக் கொண்டெரிந்தது. ஓடுகள் படபடவென வெடித்துச் சிதறின. உத்திரங்கள் கருகிச் சாய்ந்தன. ஐயரும் அவர் மனைவியும் "குய்யோ முறையோ" வெனக் கூவினார்களேயொழிய நெருப் பை அணைக்க அவர்கள் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. பண்ணை ஆட்கள் செய்தியறிந்து தொலைவில் ஓடிவருகின்றமை காதில் விழுந்தது. எனக்கு நிலை கொள்ளவில்லை. ஸரஸா வின் கதி என்னவாயிற்றென்று தெரியவில்லை. தீயும் வரவரக் கொட்டிலை நெருங்கிவிட்டது. என்னால் ஆனவரையில் என் கழுத்துக் கயிற்றை அறுத்துப்பார்த்தேன்; முடியவில்லை; முளையோடு பிடுங்கிவிடலாமெனக் கருதி இழுத்துப்பார்த் தேன். முளை அசையவில்லை. "சரி, நம காலம் கிட்டி விட் டது" என்று முடிவு செய்து கொண்டேன். எனினும், வாளாவிராமல் கயிற்றைப் பற்களாற் கடித்து அறுக்க முயன் றேன். அப்பொழுது "இராமா! இராமா!!" என்று நடுங் கிய குரலிற் கத்திக் கொண்டு ஸரஸா உள்ளே ஓடி வந்தாள். வீடே பற்றியெரியும்போது மாடாகிய என்னையா ஐயரும் அம்மாளும் நினைக்கப் போகிறார்கள்! நினைக்கமாட்டார்கள் தான்! ஆனால் ஏழே வயதுடைய என் அருமைத்தோழி ஸரஸா என்னை நினைந்து அந்நிலையில் அங்கு ஓடிவந்தது என் உள்ளத்தை மெழுகாய் உருக்கிற்று. உள்ளே வந்த ஸரஸா என் கயிற்றை விரைவில் அவிழ்த்தாள். கயிறு அவிழ்ந்து விழுந்தது; ஆனால் அதே நொடியில் கொட்டிலும் தீப்பிடித் துக் கொண்டது. புகை எங்கும் சூழ்ந்து கொண்டது. தட தடவென இடி இடித்ததுபோல் ஒரு பெரிய ஓசை கேட்டது. வீடு இடிந்து விழுந்ததுபோலும்! "இராமா நான் என்ன செய்வேன்!" என்று சொல்லிக் கொண்டே ஸரஸா கீழே

சுருண்டு விழுந்தாள். உடனே நான் குனிந்து அவள் இடுப்பில் இறுகக்கட்டியிருந்த பாவாடை நாடாவை வாயினுற் கவ்வி அவளை மெல்லத் தூக்கினேன். நோயால் மெலிந்திருந்த அவள் மிக இலேசாகவே இருந்தாள். அவளைக் கவ்வித் தூக்கிக் கொண்டு விரைவில் கொட்டகையின் பின்புறமாக வெளியே வந்தேன். நல்ல வேளையாக அவள் மேல் தீப்பொறிகள் ஒன்றும் விழவில்லை. மெல்ல நடந்து வீட்டின் மேற்புறம் சற்றுத் தொலைவிலிருந்த கிணற்றடிக்கு வந்து சேர்ந்து அவளைக் கீழே வைத்தேன். பாவம்! குழந்தை ஆடவில்லை, அசையவில்லை; மூட்டைபோற் சுருண்டு கிடந்தாள். அவள் உள்ளங் கால்களையும் கைகளையும் நெற்றியையும் என் நாக்கினுற் சூடு பிறக்குமாறு நக்கினேன். சற்று நேரத்தில் அவள் ஒரு திணறல் திணறிக்கொண்டு கண்ணை விழித்துப் பார்த்து "இராமா" என்றாள். நான் அவளருகே படுத்துக் கொண்டேன். அருகிலிருந்த நீர்ச்சாலிலிருந்த நீரில் இரண்டு கை அள்ளியுண்டாள் குழந்தை; அதன்பின் மீண்டும் மயக்கமுற்று என் மேல் சாய்ந்து கொண்டாள்.

"எங்கே குழந்தை! குழந்தை எங்கே!!" என்று ஐயரும் மனைவியும் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தனர். என்னையும் குழந்தையையுங் கண்ட அவர்கள் "இதோ இருக்கிறாளே!" என்று கூறிக்கொண்டு அருகில் வந்தார்கள். "அம்மா! இராமன்தான் என்னைக் காப்பாற்றினான்! அவன் இல்லாவிட்டால் நான் கொட்டகையிலேயே இறந்திருப்பேன்" என்றாள் ஸரஸா. "இராமனாவது, சோமனாவது! அந்த மாடு எப்படியாவது ஒழியட்டுமென்று விட்டுவிடாமல் நீ அதைத் தேடிக்கொண்டு போனதாலன்றோ தீயில் அகப்பட்டுக் கொண்டாய்! எல்லாம் இந்தச் சனியனால் (என்னால்!) வந்த கேடுதான்" என்றாள் தாயார். "நாளைக்கே இதனைத் தொலைத்துவிடலாம். நீ இப்பொழுது குழந்தையை அழைத்து வா!" என்றார் ஐயர். என் அருமைத் தோழியை அவர்கள் அழைத்துக் கொண்டு சென்றனர்.

எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. "அவர்கள் என்னைத் தொலைக்கும் வரையில் வைத்துக்கொள்வானேன். நாமாகவே போய்விடலாம்" என்று முடிவு செய்து கொண்டேன். ஸரஸாவை நினைக்கும் போதெல்லாம் துயரம் பெருகிற்று. இருந்தாலும் என் செய்வது? ஒருவாறு பொறுத்துக்கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு என் கால்கள் போனவழி நெடுந்தொலை போனேன்.

மதிப்புரை

சொல் விளக்கம் :— திரு. சே. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதியது: தமிழ்க்கடல் ஆபீஸார் பதிப்பித்தது. தமிழை எழுதும் போது நேரும் பிழைபாடுகள் பெரும்பாலும் ரகர றகரங்களிலும், னகர நகர ணகரங்களிலுமே யாகும். அவற்றை நீக்கிப் பிழையற எழுதுவதற்கு இச் சிறுநூல் உதவியாகும். விலை அணா. 3.

மயூரகிரிப் புராணம் (மூலமும் உரையும்):—சிவகங்கை வித்து வான் வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதியது. யாழ்ப் பாணம் வே. திருஞானசம்பந்தப் பிள்ளை அவர்கள் பதிப்பித்தது. குன்றக்குடி முருகர்மீது வடமொழியிலுள்ள மயூரகிரி மான்மியத்தி னின்று இது மொழிபெயர்க்கப்பட்டதாகும். கந்த விரதங்களின் பெருமையை விரித்துரைப்பது. விலை ரூ. 1-8-0

மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்:—திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். எ., எம். எல் தாகூர் சட்டவிரிவுரையாளர் எழுதியது. சேலம் தமிழ்நெறி விளக்கப் பதிப்பக வெளியீடு. 156 பக்கங்கள் கொண்ட சிறந்த மொழியாராய்ச்சி நூல். மொழிநூற் கொள்கை, எழுத்து வடிவம், மொழிநூல் வரலாறு, எழுத்தொலி இயல்பு, சொல்லமைப்பு ஆகிய இவையும், தனிப்பட்டவகையில் தமிழ் மொழி அமைப்பும் இந்நூலின்கண் எளிய நடையில் நன்கெடுத் தெழுதப்பட்டுள்ளன. யாவர்க்கும் பயன்படக்கூடிய ஒரு சிறந்த நூல். விலை ரூ. 1.

ஹிட்லரும் மஹாயுத்தமும்:—திரு. எ. ஜி. வெங்கடாச்சாரி அவர் கள் எழுதியது. உலகமெங்கும் ஹிட்லரைப்பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கும் இந்நாளில் அவருடைய வரலாற்றின் சிறந்த பகுதி யாகிய போர் முறைப் பகுதியை விளக்கிக் கூறுவதாகும் இந்நூல். மயிலை பிருந்தாவன பிரசுராலயத்தார் பதிப்பித்த 400 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 1-4-0

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?:—ஆசிரியர் மறைமலையடிக ளாரின் புதல்வரும், கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழாசிரியர் வேலையைத் துறந்து சிறை சென்றவருமான வித்துவான் மறை. திருநாவுக்கரசர் எழுதியது. "நாட்டுப்பற்றிற்கு மொழிப்பற்று அடிப் படை என்பதையும், நாட்டு மக்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கு நாட்டு மொழி வளர்ச்சி இன்றியமையாதென்பதையும், நாட்டு மொழிக்குப் பிற மொழிக்கலப்பு எவ்வாறு இடையூறு விளைப்பது என்பதையும் பல எடுத்துக்காட்டுகளால்" ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். தமிழின் தனிச்சிறப்பும் அதன் கலைவளர்ச்சியும் இனிது எடுத்துக் காட்டப்பட் டுள்ளது. இதன் விலை அணா. 4.

இந்நூல்களெல்லாம் எம் கழகத்திற் கிடைக்கும்.

தமிழர் திருமணம்—மகளிர் மாநாடு

(முகப்புப்படம் பார்க்க)

சென்ற ஜூலைத் திங்கள் 16-ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற தமிழர் திருமண மாநாட்டு முடிபுகளை விளம்பரம் படுத்தி அவற்றிற்கு ஆதரவளிக்கக் கருதி அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் மாலை 4 மணிக்குச் சென்னை ஆதியப்ப நாயக்கன் தெருவிலுள்ள புரொகிரஸிவ் பள்ளி மண்டபத்தில் தமிழ் மகளிர் மாநாடொன்று கூடிற்று. ஏராளமான பெண்கள் வந்து குழுமியிருந்தனர். பண்டிதை திரு. த. பத்மாவதி அம்மையார் தலைமை தாங்கினர். சென்னை திருமணமாநாட்டு முடிபுகள் படிக்கப்பட்டன. அவற்றைச் செயலிற் கொண்டுவருதல் இன்றியமையாததாகும் என்பதை விளக்கி அவ்வாறே தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பின் அறிவற்ற மூடச் சடங்குகளை ஒழித்துக் கட்டவேண்டுமென அறிவிற் சிறந்த பல பெண்மணிகள் பேசினர். திரு. தாமரைக்கண்ணி யம்மையார் நன்றிகூற மாநாடு மாலை $6\frac{1}{2}$ மணிக்கு இனிது முடிவுற்றது.

உயர்திரு ஞானியார் பொன்விழா

திருப்பாதிரிப்புலியூர் திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூர் ஆதீனம் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் பட்டம் ஏற்று ஐம்பதாண்டுகள் நிரம்பியதை முன்னிட்டு நவம்பர் 18, 19-ஆம் நாட்களில் திருப்பாதிரிப்புலியூர் மடாலயத்தில் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையில் நிறைவுப் பொன்விழா நடைபெறும். திரு. சச்சிதாநந்தம் பிள்ளை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற பேரறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். தமிழ் நாட்டாரும் ஏனையதமிழன்பர்களும் சைவ அன்பர்களும் இவ்விழா சிறப்பாக நடந்தேறுதற்குத் தங்கள் தங்களாலியன்ற உதவி செய்ய வேண்டுமென்று திரு. கே. சீதாராம ரெட்டியார், ஆர். கே. வேணுகோபால நாயுடு முதலியவர்களை உள்ளிட்ட பொன்விழாக் குழுவினர் வேண்டிக் கொள்கின்றனர்.

பிரிவு

புதிய புதிய தமிழ் அச்சு எழுத்துக்களை வார்த்துத் தமிழ் மொழிக்கு அழகும் ஆக்கமும் அளித்த நெல்சன் டைப் பவுண்டரி உரிமையாளர் திரு. மாணிக்க முதலியாரவர்கள், 1939 அக்டோபர் 5-ஆம் நாளில், இறையடி சேர்ந்ததை குறித்துப் பெரிதும் வருந்துகின்றோம். பிரிந்த அவர்கள் இன்னுயிர் இறையடியில் இன்புற்றிருக்க!



சென்னை, பிரசங்க பூஷணம்

பு. பா. இரத்தினசபாபதி நாயகர்.